
லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-8 இதழ்-8 ஜனவரி - 2020 மாதஇதழ் விலை ₹ 10

makkalvisaranai



# நிர்வாகத்திறனில் தமிழக அரசுக்கு முதலிடம்



# வள்ளலார் அருளிய

# கல்ப மருந்து



பத்தியமில்லா மருந்து

## குணமாகும் நோய்கள்






- புற்று நோய்கள்
- இருதய அடைப்புகள்
- உள் உறுப்புகளில்

ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்



- சிறுநீரக கற்கள்
- சிறுநீரகக் கோளாறுகள்
- கல்லடைப்பு
- சதையடைப்பு
- சிறுநீர் பிரச்சனை
- இரத்த ஓட்டம் சீராகும்



- சளி ■ இருமல் ■ கப ரோகங்கள்
- கபம் ■ காசம் ■ சைனஸ்
- கண்பார்வை கோளாறுகள்
- வாதம் ■ பித்தம்

போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்

நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்



சித்த மருத்துவர் **K. இராஜமாணிக்கம்**

**அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்**

எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
எண்.2/9, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89

**செல் : 99417 64922, 94441 80984**

# தலையங்கம்

"அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்"

## எப்பொழுது பதற்றம் தனியும்

மத்திய அரசு கொண்டு வந்துள்ள குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்த்து கடந்த ஒரு மாதமாக நாடு முழுவதும் எதிர்ப்புக் குரல் எழுந்து போராட்டங்கள் நடந்து வருகின்றன. இதில் பல மாநிலங்களில் வன்முறை தலைதூக்கியது. இந்த பதற்றமான நிலை முழுவதுமாக அடங்காத நிலையில், நாடு முழுவதும் தேசிய மக்கள் தொகை பதிவு (என்பிஆர்) வரும் ஏப்ரல் மாதம் தொடங்குகிறது. அதற்காக மத்திய அரசு ₹13 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தேசிய குடிமக்கள் பதிவேடு (என்ஆர்சி) பணியை தொடங்கவே நாடு முழுவதும் எதிர்ப்பு கிளம்பியுள்ள நிலையில், அதற்கான அடித்தளப் பணியாக தேசிய மக்கள் தொகை பதிவு இருக்குமோ என்ற அச்சம் பொதுமக்களை தொற்றிக் கொண்டுள்ளது. 2021ம் ஆண்டுக்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தும்போது அதனுடன் சேர்த்து மக்கள் தொகை பதிவேடு புதுப்பிப்பு பணியை மேற்கொள்ள பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை நிதி ஒதுக்கீடு செய்து ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கும் என்ஆர்சி.க்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் அரசு திட்டவட்டமாக கூறிவிட்டது. ஆனால், நாடாளுமன்றத்தில் சொன்னதற்கும், பிரதமர் சொன்னதற்கும், அமித்ஷாசொன்னதற்கும் பெருத்த வித்தியாசம் உள்ளது. அரசு இதில் உண்மையை மறைக்கிறதோ என்ற சந்தேகம் தான் பலரிடம் உள்ளது.

பொதுமக்கள் தெரிவிக்கும் தகவல்கள் அடிப்படையில்தான் பதிவு செய்யப்படும். மக்கள் தொகை பதிவு என்பது நாட்டின் வழக்கமாக குடியிருப்பவர்கள் பட்டியல் தான் என்று கூறியுள்ளது. இருந்தாலும் இந்த விஷயத்தில் இன்னும் தெளிவான தகவல்கள் இல்லை.

கடந்த 2010ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது, மக்கள் தொகை பதிவேட்டுக்கான தகவல்களும் சேகரித்து பதிவு செய்யப்பட்டன. அதன் பின்னர் 2015ல் வீடு வீடாக தகவல்கள் சேகரிக்கப்பட்டு தேசிய மக்கள் தொகை பதிவேடு புதுப்பிக்கப்பட்டது. இந்த பட்டியலை டிஜிட்டல் மயமாக்கும் பணியும் முடிந்துள்ளது. இது ஒரு புறம் இருந்தாலும், நாடாளுமன்றத்தில் மத்திய அமைச்சர்கள் தெரிவித்த கருத்துகளுக்கும், நாடாளுமன்றத்திற்கு வெளியே அவர்கள் தெரிவித்த கருத்துகளுக்கும் வித்தியாசம் இருப்பது மக்களிடையே பீதியையும் அச்சத்தையும் ஏற்படுத்தி உள்ளது என்பது எதார்த்தம். இது குறித்து மத்திய அரசு தெளிவுபடுத்த வேண்டும். மக்கள் மத்தியில் எழுந்துள்ள சந்தேகத்தை தீர்க்க வேண்டிய கடமையும் பொறுப்பும் மத்திய அரசுக்கு உள்ளது. இதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும். அப்போதுதான் நாட்டில் நிலவும் பதற்றம் தணியும் என்பதில் சந்தேகம் இல்லை.

**- ஆசிரியர்**



# கிராம சபையின் அதிகாரத்தை உள்ளபடி அறிந்திருக்கிறோமா?

உ உள்ளாட்சி என்பது மக்கள் தங்களது சிறிய அளவிலான சமூகத்தின் தேவைகளைத் தாங்களே தீர்மானித்து, நிறைவேற்றிக்கொள்வதற்கு அதிகாரம் அளிக்கும் அமைப்புமுறையாகும். உள்ளாட்சி நிர்வாகத்தில் மக்கள் பங்கேற்கவும், கேள்விகள் கேட்கவும், நிராகரிக்கவும், சரிப்படுத்தவும், தேவையானதைக் கேட்டுப் பெறுவதற்குமான அதிகாரத்தைப் பஞ்சாயத்து ராஜ் சட்டம் மக்களுக்கு வழங்கியுள்ளது.

மத்திய, மாநில அரசுகள்போலவே உள்ளாட்சி அமைப்புகளும் இடைவெளியின்றித் தொடர வேண்டும் என்று அரசமைப்புச் சட்டம் தெரிவிக்கிறது. இதை உறுதிசெய்ய வேண்டியது மாநில தேர்தல் ஆணையத்தின் சட்டபூர்வமான கடமை. உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக்காலம் முடிந்த ஆறு மாதங்களுக்குள் புதிய பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அப்படி நடக்காதபோது நீதிமன்றங்கள் தலையிட்டு தேர்தல் நடத்துவதை உறுதிப்படுத்த வேண்டும். தேர்தல் நடத்துவது நீதிமன்றத்தின் பணியல்ல என்றாலும் உள்ளாட்சியை உறுதிசெய்யும் கடமையும் பொறுப்பும் அதற்குள்ளது. ஏனெனில், அரசமைப்புச் சட்டத்தைக் காக்கும் பொறுப்பு நீதிமன்றங்களிடம் இருக்கிறது.

இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பே உள்ளாட்சி அரசுகள் அமைந்திருக்க வேண்டிய தமிழகத்தில் அப்பட்டமாக அரசமைப்புச் சட்டம் மீறப்பட்டிருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசே இதற்குக் காரணமாகவும் இருக்கிறது என்பது ஒருபுறமிருக்க, இந்தத் தாமதத்துக்கு நீதிமன்றங்களின் நடைமுறைகளும் ஒரு வாய்ப்பாக அமைந்துவிட்டன. ஏதாவது ஒரு மாநிலத்தில் 3 ஆண்டுகள் தொடர்ந்து சட்டமன்றத் தேர்தலைத் தள்ளிவைக்க நீதிமன்றங்கள் அனுமதித்திருக்குமா? உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அதே நடைமுறை பொருந்தும் தானே? அரசியல் கட்சிகளும்கூடத் தங்களது அரசியல் அதிகாரங்களை விரிவுபடுத்தும் தளமாகவே உள்ளாட்சி அமைப்புகளைப் பார்க்கின்றனவே அல்லாமல் தேர்தல் தள்ளிப்போடப்பட்டதை அரசமைப்பு மீறலாக அவைகள் கருதவில்லை.

பஞ்சாயத்து ராஜ் சட்டம் கிராமப் பஞ்சாயத்துகளில் உள்ள மக்களுக்கு ஒரு தனிச்சிறப்பான அதிகாரத்தை வழங்கியுள்ளது. அது கிராம சபை எனும் சக்தி. சட்டத்தை இயற்றும் அதிகாரமிக்க சட்டமன்றங்களிலும் நாடாளுமன்ற அவைகளிலும் உறுப்பினர்கள்தான் விவாதிக்க முடியுமே தவிர, குடிமக்கள் அவற்றில் பங்கேற்க முடியாது. ஆனால், தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் ஊராட்சி மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைக் கேள்வி கேட்கும் அதிகாரத்தை மக்களுக்கு வழங்கியுள்ளது பஞ்சாயத்து ராஜ் சட்டம். நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மட்டுமல்ல, செய்த வேலைகளை, செய்யவுள்ள வேலைகளையும் பரிசீலனைக்கு உட்படுத்தும் அதிகாரத்தையும் வழங்கியுள்ளது.

கிராமத்தில் செய்யப்படும் ஒவ்வொரு ரூபாய் செலவும் கிராம சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். செய்யப்பட்ட, செய்யப்படும் ஒவ்வொரு வேலையும், திட்டமும் கிராம சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். தமது பஞ்சாயத்துப் பகுதியில் மக்களுக்காக என்னென்ன புதிய திட்டம் தேவை, என்னென்ன வேலைகள் வேண்டும் என்றெல்லாம் கிராம சபையில் தீர்மானம் நிறைவேற்ற முடியும். அவற்றைச் செய்யுமாறு ஊராட்சி ஆணையரையும், மாவட்ட

ஆட்சியரையும் கேட்க முடியும். ஏன் செய்து தரவில்லை என்று காரணமும் கேட்க முடியும். அவர்களும் விளக்கம் அளித்தாக வேண்டும். இத்தகைய அதிகாரங்களைக் கொண்டிருக்கும் கிராம சபை, அதைவிட உச்சமாக ஊராட்சி மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை நிராகரிக்கும் அதிகாரத்தையும் பெற்றிருக்கிறது.

இத்தகைய உச்சபட்ச அதிகாரத்தை மக்கள் கையில் எடுத்திருந்தால் கிராம நிர்வாகத்தை நல்லபடியாக நடத்தியிருக்க முடியும். கிராம சபை என்பது கால வரம்பு இல்லாத நிரந்தர அமைப்பு. கடந்த மூன்று ஆண்டுகளில், ஆண்டுதோறும் கட்டாயமாக நடத்தப்பட வேண்டிய நான்கு கட்டாய கிராம சபைக் கூட்டங்களோடு, வரவு - செலவுக் கணக்குகளைச் சமர்ப்பிக்கவும், திட்டங்களை நடத்திடவும் அவ்வப்போது ஓரிரு சிறப்புக் கிராம சபைக் கூட்டங்களும் ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்திலும் நடந்துள்ளன. உடைந்த குடிநீர்க் குழாயை சரிசெய்ததற்கான செலவு, குடிநீர்த் தொட்டிக்கு பிளீச்சிங் தூள் வாங்கிய செலவு, சாலை போட்ட செலவு உள்ளிட்ட அனைத்துச் செலவுகளும் கிராமசபைக் கூட்டங்களில்தான் அங்கீகரிக்கப்படுள்ளன. கிராம சபையின் அங்கீகாரம் இல்லாவிட்டால் இச்செலவுகள் ஏற்கப்பட முடியாததாகக் கொள்ளப்படும்.

கிராம சபையின் வாயிலாக உள்ளாட்சி நிர்வாகத்தில் மக்கள் இவ்வளவு அதிகாரம் செலுத்த முடியும் என்பதை அறிந்துள்ள அரசியல் கட்சிகள் தத்தமது தொண்டர்களை அதில் ஏன் ஈடுபடுத்தவில்லை என்பது புரியாத புதிரே. கட்சிகள் தத்தமது தொண்டர்களிடம் கிராம சபையின் அதிகாரம் குறித்து விழிப்புணர்வு உருவாக்கியிருந்தால், கிராம சபைக் கூட்டத்தில் முறையாகப் பங்கேற்க அறிவுறுத்தியிருந்தால், கிராமப் பஞ்சாயத்தின் நிலையை மாற்றி அமைத்திருக்கலாம். இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தவில்லை.

கட்சித் தலைமைகளுக்கு பஞ்சாயத்து அரசின் செயல்முறைகள் தெரிந்திருக்கவில்லை என்று கூற முடியாது. ஆனால், கிராம சபை அமைப்பின் மீது பெரிய நம்பிக்கை இல்லாதது இந்த அலட்சியத்துக்கான காரணமாகக் கருத வேண்டியிருக்கிறது. பின் ஏன் அவை கிராம சபை அமைப்பைப் பயன்படுத்தவில்லை என்பது ஆய்வுக்குரியது. விளைவாக, பஞ்சாயத்து அரசின் ஆட்சி அதிகாரத்திற்காகத் தேர்தல்களில் போட்டியிடுபவர்களில் ஆகப் பெரும் பகுதியினர் கிராம சபையின் அதிகாரம் குறித்து அறிந்திராதவர்கள் என்பது. கடந்த மூன்று ஆண்டுகளில் ஒரு முறைகூட கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளாதவர்களும்கூட, இன்று தமது கிராமத்தை நிர்வாகம் செய்வதற்காக மக்களிடம் அதிகாரத்தைக் கேட்டுப் போட்டியிடுகிறார்கள்.

சமூக அக்கறையுடன் பொதுப் பணிகளில் பங்கெடுத்துவரும் இளைஞர்களும்கூட கிராம சபையின் அதிகாரங்களைச் சரிவர உணர்ந்திருக்க வில்லை. ஒருவேளை, கிராம சபையின் அதிகாரங் களைக் கையாள்வதற்கு இவர்களைத் தயார்ப் படுத்தியிருந்தால், கிராம சபைக் கூட்டங்களில் இன்னும் பெரிய மாற்றங்கள் நடந்திருக்கக்கூடும். சாலையோரத்தில் நடப்பட்ட மரக்கன்றுகளுக்கு தண்ணீர் ஊற்றுவதற்காக அனைத்து ஊராட்சி களுக்கும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீலில் தள்ளுவண்டி வாங்கியதையாவது நிச்சயம் கேள்விக்குள்ளாக்கி இருப்பார்கள். உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றிபெற, பல லட்சங்கள் தேவைப்படும் நிலையும் பதவிகள் ஏலம் விடப்படும் நிலையும் உருவாகியிருக்காது.

கிராமங்கள் முழு அதிகாரம் மிக்கவையாக மாறத்தக்க அளவில் கிராம சபைகள் மேலும் அதிகாரப்படுத்தப்பட்ட வேண்டும் என்பது ஒருபுறம் இருக்க, பஞ்சாயத்து ராஜ் சட்டம் வழங்கியுள்ள வாய்ப்பின் மூலம் கிராம மக்களே அதிகாரம் மிக்கவர்கள் என்ற புரிதலும், அந்த அதிகாரத்தை முறையாகக் கையாளப் பழகுவதும் இனியேனும் நடக்க வேண்டும். அப்போதுதான் ஊழலுக்கு வாய்ப்பில்லாத கிராம நிர்வாகத்தை மலர வைக்க முடியும்.

**1835-36** ல் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த சார்லஸ் மெட்காஃப் பிரிட்டிஷ் அரசுக்கு எழுதிய கடிதத்தில், 'கிராம சமூகங்கள் சிறு குடியரசுகள்போல் இருக்கின்றன. ஏறத்தாழ தங்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் கொண்டிருக்கின்றன. எந்த வெளி உதவிகளும் தேவைப்படாத சுதந்திரமானவையாக இருக்கின்றன. (வெளியுலகில்) எந்தவொன்றும் நிகழாததுபோல் அவை நிலைத்து இருக்கின்றன. சாம்ராஜ்யங்கள் மாறிமாறி சரிந்தன, ஒரு புரட்சி போய் மற்றொரு புரட்சி வந்தது. ஆனால் கிராமங்கள் ஏதும் நடக்காதது போல் அப்படியே இருந்தன'. இந்தியாவில் வலுவான உள்ளாட்சி மீண்டும் மலர வேண்டும். வாழும் கிராமங்கள் என்ற நம்மாழ்வாரின் கனவும், கிராம சுயராஜ்ஜியம் என்ற காந்தியின் கனவும் அதுதானே.

**- குருதேவ்**

தமிழக நெடுஞ்சாலைத்துறையில் அறிவிக்கப்பட்ட 120 திட்டப்பணிகள், நில ஆர்ஜிதம் செய்யாமல் முடங்கி கிடக்கிறது. தமிழகத்தில் 63,650 கி.மீ. தூரத்திற்கு ரோடு உள்ளது. தேசிய நெடுஞ்சாலை, நெடுஞ் சாலையம் ஆணையகம், மாநில நெடுஞ் சாலைத்துறை, மாவட்ட முக்கிய ரோடு, இதர மாவட்ட ரோடு, கிராம ரோடு, உள்ளாட்சி ரோடு என பல்வேறு பிரிவுகளாக ரோடு பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பராமரிப்பு, புதுப்பித்தல், உருவாக்குதல் பணிகளில் நில ஆர்ஜித பணி முக்கியத்துவம் பெற்றுள்ளது. மாவட்ட வருவாய் அலுவலர்கள் கட்டுப்பாட்டில் இந்த நில ஆர்ஜித பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆனால் வருவாய்த்துறையினர் பணி சுமையால் நில ஆர்ஜிதம் செய்ய முடியாத நிலையிருப்பதாக தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து சென்னை, விழுப்புரம், திருச்சி, மதுரை, சேலம், திருப்பூர், கோவை, நெல்லை மாவட்டங்களில் ரோடு பணிகளுக்காக நிலம் எடுக்க சிறப்பு பிரிவு 2 ஆண்டிற்கு முன் துவக்கப்பட்டது. இந்த பிரிவு துவங்கப்பட்டு, தாசில்தார்கள், வருவாய் ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டும் பணிகள் முடங்கியே கிடக்கிறது. 10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான 120 திட்ட பணிகள், குறிப்பாக புதிய பைபாஸ் ரோடு, தரை பாலம், உயர்மட்ட பாலம், ரோடு விரிவாக்கம், புதிய பாதையில் ரோடு அமைத்தல் போன்றவை முடங்கிவிட்டது. கன்னியாகுமரி, சேலம், திருப்பூர், கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் 200 திட்டப்பணிகளுக்காக 2 ஆண்டில் 1,760 எக்டர் நிலம் இந்த சிறப்பு பிரிவால் கையகப்படுத்தப்பட்டது.

120 திட்டப்பணிகளுக்காக குறிப்பாக கோவை ரிங் ரோடு, கரூர், ஊட்டி பைபாஸ் ரோடு, பொள்ளாச்சி ரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி ரோடு விரிவாக்க

# நில ஆர்ஜிதம் செய்யாததால் காத்திருக்கும் 120 திட்டங்கள்

## 4 ஆண்டாக 41 பணிகள் தடுமாற்றம்



பணிகளுக்காக 7 ஆயிரம் எக்டர் நிலம் கையகப்படுத்தவேண்டியுள்ளது. கடந்த 5 ஆண்டாக, மாவட்ட வருவாய் பிரிவும், சிறப்பு பிரிவுகளும் நில ஆர்ஜித பணிகளை இழுபறி நிலையில் வைத்திருக்கிறது. கட்டுமானங்களை இடித்துவிட்டு நில ஆர்ஜிதம் செய்வதில் மட்டுமே கடந்த காலங்களில் பிரச்னை நிலவியது. தற்போது பயன்பாட்டில்லாத நிலம், அரசு மற்றும் அரசு சார்பு துறைகளிடம் உள்ள நிலங்களை கூட சிறப்பு பிரிவினரால் கையகப்படுத்த முடியவில்லை.

வருவாய்த்துறை வசம் உள்ள நிலங்களை அதே துறை அதிகாரிகளால் கூட கையகப்படுத்த தாமதம் நிலவுகிறது. உள்ளாட்சி அமைப்புகள், பொதுப்பணித்துறை, மின் வாரியம் உட்பட பல்வேறு துறையினர் தங்களது வசம் உள்ள நிலங்களை ரோடு பணிக்காக விட்டு தர காலம் கடத்தி வருகின்றனர். நில நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் நில ஆர்ஜித பைல்கள் குவிந்து வந்தும் அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடந்த 4 ஆண்டில் 41 திட்டப்பணிகளுக்காக நில ஆர்ஜிதம் தொடர்பாக அனுப்பிய பைல்கள் இறுதி செய்யப்படாமல் முடங்கி கிடக்கிறது. நில ஆர்ஜிதம், மறு வாழ்வு, மறு குடியமர்வு உரிமைகள் சட்டம் 2013ன் படி, நில ஆர்ஜிதம் செய்வதில் சிக்கல் இருப்பதாக சிறப்பு பிரிவினர் புலம்புகின்றனர். வழக்கு விவகாரத்தாலும் சில ரோடு பணிகளின் அறிவிப்பு நிலையில் இருக்கிறது. நில ஆர்ஜித விவகாரத்தால் காங்கேயம்பாளையம் பைபாஸ் ரோடு உள்ளிட்ட சில திட்டப்பணிகள் ரத்தாகிவிட்டது.

இது பற்றி விவசாயிகள், பொதுமக்கள் கூறுகையில், ''ரோட்டில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில்லை. பிரதான ரோடுகளில் பெரிய நிறுவனங்கள், கட்டிடங்களை கையகப்படுத்த நெடுஞ் சாலைத்துறை, வருவாய்த்துறை தயாராக இல்லை. சில நிறுவனங்களுக்கு ஆதரவாக திட்ட மதிப்பீடு, வடிவமைப்பை மாற்றுகின்றனர். பல்வேறு மாவட்டங்களில் ரோடு, பாலம் கட்டும் வடிவமைப்பு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கையில் உள்ளபடி ரோடு, பாலம் அமைக்கப்படுவதில்லை. பல முறை திட்டம் மாற்றப்படுகிறது. நிலம் ஆர்ஜிதம் செய்யும்போது சந்தை மதிப்பை அதிகாரிகள் கண்டுகொள்வதில்லை. மிரட்டல் போக்கில்தான் நில ஆர்ஜிதம் நடக்கிறது'' என்றனர்.



ரோடு, பாலம் கட்டும் பணிக்கு நில ஆர்ஜித சர்வே நடத்தும் நெடுஞ்சாலைத்துறையினர் கட்டிடம், நில உரிமையாளர்களிடம் பணம் கேட்டு பேரம் பேசுவது தொடர்கிறது. திட்ட வடிவமைப்பை மாற்ற பல லட்ச ரூபாய் பெறப்படுவதாக தெரிகிறது. ரோடு, பாலம் கட்டினால் கிடைக்கும் கமிஷனைவிட, டிசைன் மாற்றுவதால், எளிதில் பெரும் தொகை கிடைப்பதால் முறைகேடு நீடிக்கிறது. விரிவான திட்ட அறிக்கையில் கூறியபடி ரோடு, பாலம் அமைக்காமல் டிசைன் மாற்றம் செய்தால் அது தொடர்பாக எந்த விசாரணையும் நடத்தப்படுவதில்லை. சந்தை மதிப்பீட்டில் நில ஆர்ஜிதம் செய்வதிலும் விதிமுறை மீறல் நடக்கிறது.

**– அகிலாண்டேஸ்வரி**



# பருவநிலை மாற்றம்: கண்டுகொள்ளாத ஐநா!

இந்த நூற்றாண்டைத் தீர்மானிக்கக்கூடிய மிக முக்கியமான பிரச்சினை பருவநிலை மாற்றம்தான். ஆனால், அது தொடர்பாக ஸ்பெயின் தலைநகர் மாட்ரிடில் நடந்து முடிந்துள்ள ஐநா மாநாடு, பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான உறுதியான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டது. பருவநிலை மாற்றம் குறித்துப் பல்வேறு நாடுகளுக்கு இடையிலான ஆய்வுக்குழு மேற்கொண்டு அதனைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளை எடுக்காவிட்டால் மிகப் பெரும் கேடுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று எச்சரித்துள்ளது. பசுமை இல்ல வாயுக்களின் தற்போதைய வெளியேற்றத்துக்கும் அடுத்து வரும் பத்தாண்டுகளில் அதைக் கட்டுப்படுத்த வேண்டிய அளவுக்கும் இடையே நீண்ட இடைவெளி இருப்பதை ஐநாவின் சுற்றுச்சூழல் திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது. அறிவியல்பூர்வமான இந்தப் புதிய ஆய்வறிக்கைகள் கிடைத்திருக்கும்பட்சத்தில், ஏறக்குறைய 200 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருக்கும் இந்த மாநாட்டின் பலன் வருத்தமளிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது.

பாரிஸ் உடன்பாட்டின் அங்கத்தினர்களுக்கு இடையே தற்போது ஸ்பெயினில் நடந்து முடிந்துள்ள மாநாடு, கரியமில வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவது குறித்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த அமைப்புகளையெல்லாம் செயல்படாத நிலைக்கு ஆளாக்கி ட்டது. பாரிஸ் உடன்பாட்டுக்கு முந்தைய கியோடோ உடன்படிக்கையின்படி தூய்மையை மேம்படுத்தும் தொழில்நுட்பத்துக்காகச் செலவிடுவதற்குச் சில நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன. குதிரை பேர பாணியிலான இந்த நிலைப்பாடு, பருவநிலை மாற்றத்தால் மிகவும் மோசமான பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு இழப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது.

பாதிப்புகளைப் பற்றிய ஆய்வு விவரங்கள், இவ்விஷயத்தில் தீவிர கவனமும் உடனடி நடவடிக்கைகளும் தேவை என்பதை எடுத்துக்காட்டுகின்றன. ஆனால், வெப்பநிலை அதிகரிப்பை 1.5 டிகிரி செல்சியஸ் என்ற அளவுக்குள் நிலைநிறுத்தும் வகையில்

பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறினாலும் மாநாட்டின் இறுதி அறிவிக்கை அந்த இலக்கைப் பலவீனப்படுத்தும் வகையிலேயே உள்ளது. பருவநிலை மாற்றங்கள் மற்றும் அதன் பாதிப்புகளைச் சமாளிக்கவும் ஏழை நாடுகளுக்கு அதற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும் வளரும் நாடுகள், அடுத்த ஆண்டிலிருந்து ஆண்டொன்றுக்கு இந்திய மதிப்பில் ஏறக்குறைய ரூ.7 லட்சம் கோடி மதிப்பிலான தொகையை உருவாக்க வேண்டும் என்று பருவநிலை மாற்றம் தொடர்பான உடன்பாட்டில் கையெழுத்திட்ட நாடுகள் வலியுறுத்தியுள்ளன. ஆனால், பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற சர்வதேச குடிமைச் சமூகத்தின் அழுத்தத்தை அந்நாடுகள் தவிர்த்துவிட முடியாது.

இந்தியாவின் மொத்த கரியமில வாயு வெளியேற்ற அளவைக் காட்டிலும் அதன் சராசரி தனிநபர் அளவு குறைவாகவே உள்ளது. மற்ற பெரிய நாடுகளைக் காட்டிலும், பாரிஸ் உடன்படிக்கையின் கீழான அதன் இலக்கை எளிதில் அடைந்துவிட முடியும். எனினும் நிலக்கரி, பெட்ரோல் உள்ளிட்ட புதைபடிவ எரிபொருள் பயன்பாட்டைக் குறைத்துக்கொள்வது என்பது நீண்ட கால நோக்கில் தவிர்க்க முடியாதது. இந்தியா இந்த இலக்கை நோக்கி நடை போட வேண்டியது அவசியம்.

- **இர்வின்**

வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

# மக்கள் விசாரணை ®

மக்களின் மனக்குமுறல் — மாத இதழ்

**லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு**

**ஆண்டு-8 இதழ்-8 ஜனவரி - 2020**

**ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ்** சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் **ஆ.மவுரியன்**, B.A., M.A., Ph.D.(Hons).

ஆசிரியர் குழு
**V.அருணாச்சலம், A.C.குமார், S.அனந்த கிருஷ்ணன்**, M.A.,

இதழியல் ஆலோசகர்
**P. ஆறுமுகம்**, B.Sc., A.E.M.S.A.C.,
Rtd. Sr. Audit Officer, Scientific Departments (C&AG of India) New Delhi

நிர்வாக ஆசிரியர்
**வீ.சிவசங்கரன்**, B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன்
P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி
அ.மு.ரமணாத்திரி, S.சுப்ரமணியன்

**முதன்மை செய்தியாளர்கள்**
P.தாமோதரன் சேலம், Dr. M.சத்தியராஜ் நாமக்கல்
N.சிலம்பரசு தர்மபுரி, A.பாலகிருஷ்ணன் கோவை
நாகராஜ் மூணாறு, R.ஜெயா தென்சென்னை
சுசி ஈஸ்வர் விருதுநகர், குருபாலகிருஷ்ணன்
P.சுப்பிரமணியன் திருநெல்வேலி

**நிருபர்கள்**
A.D.ராஜேந்திரன், P.ராமலிங்கம், ஆப்ரகாம்
K.L.ராஜேந்திரன், P.ஏழுமலை, M.நிவேதிதா
Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா
சதீஷ், அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின்
B.நாராயணசாமி, நீலகண்டன், S.மோகன்
N.சீனிவாசன், G.ராஜேஷ்கண்ணா, R.பார்த்தசாரதி
G.ஆனந்த்குமார், M.சரவணன் தி.மலை

சட்ட ஆலோசகர்கள்
**M.குணசீலன்** B.Com., M.L., **M.சுதாகர்** B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : **M.அருணாச்சலம்**

இதழ் வடிவமைப்பு : **ஆப்பிள் பிரிண்டர்ஸ்**

நிர்வாக அலுவலகம்
**மக்கள் விசாரணை**
எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
www.makkalvisaranai.com
93821 33334, 044 - 4861 5321

முனைவர் ஆ.மவுரியன்





தொடர் 26

வீரத்தமிழச்சிகளின் வரலாறு

# மூவலூர் ராமாமிர்தம் அம்மையார்

## 'தேவதாசி' முறையை அடியோடு ஒழித்துக்கட்ட போராடியவர்

*1925*-ம் ஆண்டு காங்கிரஸ்ஸில் இருந்த பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். பெண்களின் அடக்கு முறைக்கும், கைம்மை நோன்பு, பால்ய விவாகம், தேவதாசி முறை, தீண்டாமை ஆகிய பல கொடுமைகளுக்கு எதிராக ராமாமிர்த அம்மையார் போராடினார். அப்போது காங்கிரசு கட்சியில் இருந்த பெரியார், தி.ரு.வி.க, வரதராஜுலு போன்றவர்கள் தேவதாசி முறை ஒழிப்புக்காகக் குரல் கொடுத்து வந்தனர். இட ஒதுக்கீடு பிரச்சினையில் பெரியார் காங்கிரசில் இருந்து வெளியேறியபோது அவர்களுடன் சிங்காரவேலர் போன்றவர்கள் காங்கிரசில் இருந்து வெளியேறினார்கள். அவர்களுடன் அம்மையாரும் வெளியேறினார். அதற்குப் பிறகு, பெரியார் தமிழ் நாட்டில் சுயமரியாதை இயக்கம் தோற்றுவித்த போது அதில் பங்கு கொண்டு பெரும் பங்காற்றினார். 'குடியரசு' இதழில் ராமாமிர்தத்தின் அனல் பறக்கும் கட்டுரைகள் தொடர்ந்து வெளி வந்தன.

தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் கொண்டு வருவதற்காக சட்ட மன்றத்தில் வாதாடிய டாக்டர் முத்துலட்சுமி ரெட்டிக்கும் மூவலூர் ராமாமிர்தம் அம்மையாருக்கும் நல்ல நட்பு இருந்தது. தேவதாசி முறை ஒழிப்புச் சட்ட தீர்மானத்தை காங்கிரசில் இருந்த சனாதனவாதிகள் கடுமையாக எதிர்த்தனர். அதில் முக்கியமானவர் 'தீரர்' சத்தியமூர்த்தி. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அந்தச் சட்டத்தைக் கொண்டு வரத் தீர்மானம் இயற்றியபோது, 'தேவதாசி முறை தொடர்ந்து நடக்க வேண்டும்.. இல்லாவிட்டால் பாரம்பரியம் மிக்க இந்தியக் கலாசாரம் சீரழிந்து விடும்' என்று ஆவேசப்பட்டார். அப்போது முத்துலட்சுமி அம்மையார் தந்தை பெரியாரிடம் ஆலோசனை பெற்று இவ்வாறு கூறினார். 'அவர்கள் தேவதாசி முறை தொடர வேண்டும் என விரும்பினால், இதுவரை எங்கள் வீட்டுப் பெண்கள் தேவதாசிகளாக இருந்து விட்டனர். இந்தியப் பண்பாட்டைக் காக்க, இனிமேல் உங்கள் வீட்டுப் பெண்கள் தேவதாசிகளாக இருக்கட்டும்' என்றார். அதிர்ச்சியில் வாயடைத்து நின்றனர் சத்தியமூர்த்தி உள்ளிட்ட சனாதனவாதிகள். பல போராட்டங்களுக்குப் பிறகு, **1947** ஆம் வருடம், உலக அரங்கில் இந்தியாவுக்கு அவமானமாய் விளங்கிய தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

அமெரிக்காவில் கறுப்பின அடிமைகள் அனுபவிக்கும்துயரங்கள்பலநூற்றாண்டுகளாகத்

தொடர்ந்துவந்தாலும், அதைப் பற்றி அமெரிக்க மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் கறுப்பின அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கு வழிகோலிய உள்நாட்டுப் போருக்கு தொடக்கமாகவும் அமைந்தது ஹாரியட் பீச்சர் ஸ்டோவ் அம்மையார் எழுதிய 'அங்கிள் டாம்ஸ் காபின்' என்ற நாவல். அதே போன்று 'தாசிகள் மோச வலை அல்லது மதி பெற்ற மைனர்' என்கிற நாவலை **1936** ஆம் ஆண்டு வெளியிட்டார் ராமாமிர்தம் அம்மையார். அது தேவதாசிகளின் பரிதாப வாழ்வையும், சொந்த அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டது. விறுவிறுப்பான நடையில் எழுதப்பட்ட இந்த நாவலை ஒரு வரலாற்று ஆவணம் என்றே சொல்லலாம். இந்த நாவலைப் பற்றிய ராமாமிர்தம் அம்மையாரே குறிப்பிடுவது என்னவென்றால், 'புழுங்கிய மனதில் தோன்றிய எனது உணர்ச்சியின் பயனாக எழுந்தது இந்நாவல்', என்கிறார்.



தேவதாசி முறை ஒழிக்கப்பட்டாலும் ரகசியமாகப் பல இடங்களில் அந்த முறை தொடர்ந்து நடந்து வந்தது. அங்கெல்லாம் நேரடியாகச் சென்று, விசாரணை நடத்திப் பல பெண்களை விடுவித்தார். அண்ணா, சிவாஜி கணேசன், டி.வி.நாராயணசாமி போன்றோர் நடித்த நாடகங்களில் தாயார் பாத்திரத்தில் தொடர்ந்து நடித்து, எழுத்து மூலமும் கலை மூலமும் புரட்சியை செய்தார் அம்மையார்.

மூவலூர் ராமாமிர்தம் அம்மையாரின் சுமார் **50** ஆண்டு கால பொது வாழ்க்கைக்கு அவர் வாழும்போதே பெற்ற விருது அறிஞர் அண்ணா தி.மு.க சார்பில் **1956** ஆம் ஆண்டு வழங்கிய விருதுதான். சுயமரியாதை இயக்கத்திற்காக உழைத்தவர்களுக்குத் தி.மு.க சார்பில் விருதுவழங்கிச் சிறப்பிக்க அண்ணா முடிவு செய்தார். இதற்கு அவர் முதலில் தேர்வு செய்த பெயர் மூவலூர் அம்மையார் பெயர்தான்.

அம்மையாரின் கடைசி ஆண்டுகள் மயிலாடுதுறையிலேயே கழிந்தன. முதுமையிலும் சுறுசுறுப்புக்குக் குறைவில்லை. கண்பார்வை மங்கிவிட்டபோதும் தமது வேலைகளைத் தாமே செய்து கொண்டதுடன் சிறு சிறு வேலைகளிலும் ஈடுபட்டார். சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட புரட்சிப் பெண்மணி **1962 -** ஆம் ஆண்டு ஜூன் மாதம் **27-**ஆம் நாளில் தமது **70-**ஆவது வயதில் இயற்கை எய்தினார்.

"தாசிகளுக்குப் புத்திசாலித்தனமான ஆராய்ச்சி கிடையாது. பொருள் தேடும் ஆராய்ச்சியும் தாசிகளுக்குக் கிடையாது. பொருள் தேடும் பேராசையால் யார் எப்படிச் சொன்னாலும், அப்படியே நடப்பார்கள். ஆனால், எவ்வளவு சாமர்த்தியமாக அவர்கள் பொருள் தேடினாலும் கடைசி காலத்தில் இளிச்சவாய்த்தனமாய் யாரிடத்திலாவது கொடுத்துவிட்டுக் கஷ்டப்படுவார்கள். எந்தத் தாசியாவது கடைசி காலத்தில் சுகமாயிருக்கிறாளா?" என்று தனது நாவலில் ஓரிடத்தில் வேதனையோடு சொல்கிறார் ராமாமிர்தம்.

இன்றைக்குத் தேவதாசி முறை சட்டத்தால் ஒழிக்கப்பட்டுவிட்டது என்றாலும் இன்றும் தமிழ்நாட்டில் வேலூர், காரைக்குடி பகுதியில் உள்ள சில சாதியினர் தேவதாசி முறையை கடைப்பிடிக்கின்றனர். விராலிமலையில் தேவதாசிகள் உள்ளனர், புதுக்கோட்டை மாவட்டத்தில் இப்பழக்கம் நடைமுறையில் உள்ளது. திருவள்ளூர், விழுப்புரம் மாவட்டங்களிலும் உள்ளது என்பதே வேதனை. இதனை முற்றிலும் ஒழித்திட என்ன செய்யப்போகிறோம்?


**- தொடரும்**

இந்தியர்கள், குடியுரிமைச் சட்டத் திருத்தத்தைப் பற்றி பயப்படுவதற்கு ஒன்றுமில்லை என்று அரசாங்கம் கூறுவதைக் கவனமாகப் பரிசீலிக்காமல் அப்படியே புறந்தள்ளுவது சரியானது அல்ல. இந்தச்சட்டத் திருத்தத்தைப் பற்றிய விமர்சனங்களும்கூட அது குடியுரிமைக்கான அனுகூலங்களை அளிக்கிறது என்பதை மறுக்க முடியாது. இச்சட்டத் திருத்தம் யாரிடமிருந்தும் எந்த உரிமையையும் பறிக்கவில்லை; ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், வங்கதேசத்தில் தொடர்ந்து தொந்தரவுகளுக்கு ஆளாகிவரும் மதச் சிறுபான்மையினர் குடியுரிமையைப் பெறுவதற்கான சலுகைகளையே அளிக்கிறது. குடியுரிமைச் சட்டத்துக்கு எதிரானவர்களை ‘அவர்களின் ஆடைகளே அடையாளம் காட்டிவிடும்’ என்று தேர்தல் பிரச்சாரம் ஒன்றில் பேசினார் பிரதமர் நரேந்திர மோடி. அதற்கு அடுத்த நாளே, ‘இந்தியர்கள் யாரும் இந்தச் சட்டத்துக்காக வருத்தப்படுவதற்கு எதுவுமில்லை’ என்று ட்விட்டரில் கருத்து தெரிவித்திருக்கிறார்.

ஆனால், நிச்சயமாக இந்தச்சட்டத் திருத்தம் அவ்வாறான சலுகையை மேற்கண்ட நாடுகளில் தொந்தரவுக்கு ஆளாகிவரும் அஹமதியாக்கள் அல்லது ஷியாக்களுக்கு அளிக்கவில்லை. தொந்தரவுகளை அனுபவிக்கும் இந்தியர் அல்லாதவர்களில் முஸ்லிம்கள் மீது மட்டுமே பாகுபாடு காட்டப்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தில் இந்தியர்கள் அல்லது இந்திய முஸ்லிம்களுக்கு என்ன தொடர்பு இருக்கிறது? உள் துறை அமைச்சர் அமித் ஷா பல தடவை சுட்டிக்காட்டியிருப்பதுபோல, குடியுரிமைச் சட்டத் திருத்தத்தில் முஸ்லிம்களைப் பற்றி குறிப்பிடப்படவே இல்லை. அப்படியிருக்கும்போது இந்தச்சட்டத் திருத்தம் இந்திய முஸ்லிம்களைக் குறிவைத்து இயற்றப்பட்டதாக ஏன் சொல்ல வேண்டும்?

இதற்கான பதிலுக்கு, உள் துறை அமைச்சரின் பதில்களைத் தாண்டி நாம் வேறு எதையும் பார்க்க வேண்டியதில்லை. அமித் ஷா தொடர்ந்து இரண்டு விஷயங்களை அழுத்தம் கொடுத்துப் பேசிவருகிறார். ஒன்று, அஸ்ஸாமில் மேற்கொள்ளப்பட்டுவரும் தேசிய குடிமக்கள் பதிவேட்டு நடைமுறையை இந்தியக் குடிமக்களுக்கான தேசியப் பதிவேடு என்ற பெயரில் நாடு முழுவதற்கும் அவர் விரிவுபடுத்தப்போகிறார். இரண்டாவதாக, அது எந்த வரிசையில் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது என்பது முக்கியமானது. அவர் முதலில் குடியுரிமைச் சட்டத் திருத்தத்தையும், அதன் பிறகு இந்தியக் குடிமக்களுக்கான தேசியப் பதிவேட்டையும் நடைமுறைப் படுத்தப்போகிறார்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால் இந்துக்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், சமணர்கள், பார்ஸிக்கள் அனைவருடைய குடியுரிமையையும் பாதுகாத்து அதை உறுதிப்படுத்தும் பாதுகாப்பு வலையாக இந்தக் குடியுரிமைச் சட்டத் திருத்தம் இருக்கும். அஸ்ஸாமின் தேசிய குடியுரிமைப் பதிவேட்டில் சட்ட விரோதமாகக்




# குடியுரிமைச் சட்டம் என்ன சொல்கிறது




குடியேறியவர்கள் என்று வகைப்படுத்தப்பட்ட லட்சக்கணக்கான இந்துக்கள் மட்டுமின்றி, இந்தியக் குடிமக்களுக்கான தேசியப் பதிவேடு நடைமுறைக்கு வந்தால், நாடு முழுவதும் அந்நியர்கள் என வகைப்படுத்த வாய்ப்புள்ள வர்களுக்கும் அது பாதுகாப்பை அளிக்கும்.

குடியுரிமைச் சட்டத் திருத்தத்துக்கு எதிரான தீவிரப் போராட்டங்களால் புரியாமல் தவிக்கும் ஒவ்வொரு இந்தியருக்கும் அவர்களது சில எளிய கேள்விகளுக்கு இந்த நாடு பதில் சொல்ல வேண்டியிருக்கிறது: எப்போது என்ன நிகழும்; இந்தியாவில் வசிக்கும் இந்துக்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், சமணர்கள், பார்ஸிக்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோர் குடியுரிமைப் பதிவேட்டிலிருந்து விடுபட்டாலும் அவர்களுக்குக் குடியுரிமைச் சட்டத் திருத்தம் குடியுரிமையைப் பெற்றுத்தந்துவிடும் என்றால் அதற்கு நன்றி சொல்வோம். முஸ்லிம்கள் மட்டுமே குடியுரிமையற்றவர்களாக எஞ்சுவார்களா? நாடற்ற இந்த மக்கள், தடுப்பு முகாம்களுக்கு அனுப்பிவைக்கப்படுவார்களா அல்லது, முஸ்லிம் அல்லாதவர்கள் முக்கியப் பதவிகளில் அங்கம் வகிக்கும் நாட்டில் அவர்கள் கீழான நிலைக்குத் தள்ளப்படுவார்களா?

குடியுரிமைச் சட்டத் திருத்தத்தை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று அரசு அறிவித்தாலும்கூட, இந்தச் சட்டத்தின் மிக முக்கியமான அம்சமே இந்த நாட்டின் சமூக நல்லிணக்கத்துக்கு ஓர் அச்சுறுத்தல்தான். வெறுப்பைக் கக்கும் பேச்சுகளுக்கு அது மிகப் பெரும் காரணமாக இருக்கிறது. இனப்படுகொலைத் தடுப்பு நடவடிக்கைகளில் உலகின் முன்னணி வல்லுநர்களாக விளங்குபவர்கள், வெறுப்பான பேச்சுகளையே இனப்படுகொலைகளுக்கான முதன்மையான அறிகுறியாகக் கருதுகிறார்கள்.

வெறுப்புகளை உண்டாக்கும் பேச்சுகளைத் தடுப்பதற்கான சிறப்பு ஆலோசகராக ஐநா பொதுச்செயலாளரிடம் பணியாற்றும் அடாமா டியங், இந்த மாதம் இனப்படுகொலைத் தடுப்பு நாளையொட்டிப் பேசியபோது "யூத இனப்படுகொலைகள் விஷ வாயுக் கூடங்களிலிருந்து தொடங்கவில்லை. வெறுப்பான பேச்சுகளின் வழியே வெகுகாலத்துக்கு முன்பே அது தொடங்கிவிட்டது" என்று கூறியிருக்கிறார்.

ஒரு அரசியல் கருவியாக, குடியுரிமைச் சட்டத் திருத்தம் - குடிமக்கள் பதிவேடு இரண்டும் வெறுப்பான பேச்சை, குறிப்பாகத் தேர்தல் நேரத்திலாவது உருவாக்கப் போதுமானவை. ஒரு நிர்வாகக் கருவியாக, இனப்படுகொலைகளுக்கான சூழ்ச்சிகளுக்கு எதிரான அரசமைப்புச் சட்டப் பாதுகாப்புகளை அவை பலவீனப்படுத்தவும் செய்யும்.

இப்படிக் குடியுரிமையிலிருந்து விலக்கி வைக்கும் சட்டங்கள் இயற்றப்பட்டதற்கும், கடைசியில் அவை எங்கு போய் முடிந்தன என்பதற்கும் ஏகப்பட்ட வரலாற்று முன்னுதாரணங்கள் உண்டு. 1935-ன் 'ரெய்ச் குடியுரிமைச் சட்டம்' ஜெர்மானிய யூதர்களின் குடியுரிமையைப் பறித்தது. அதைத் தொடர்ந்து என்ன நடந்தது என்பது எல்லோருக்குமே தெரியும். மியான்மரில், 1982-ன் 'குடியுரிமைச் சட்டம்', அராகன் பிராந்தியத்தைப் பூர்வீகமாகக் கொண்ட ரோஹிங்கியா முஸ்லிம்களை நாடற்றவர்களாக ஆக்கியது. சர்வதேச நீதிமன்றத்தின் முன் மியான்மர் இப்போது இனப்படுகொலைக் குற்றச்சாட்டை எதிர்கொண்டிருக்கிறது.

இந்திய அரசு, 'எந்தவொரு இந்தியரும் குடியுரிமையை இழக்க மாட்டார்கள்' என்று அளிக்கும் உத்தரவாதங்கள் வரவேற்கப்பட வேண்டியவை. ஆனால், குடியுரிமைச் சட்டத் திருத்தம் - குடிமக்கள் பதிவேடு ஆகியவற்றின் பிரிவுகள், முஸ்லிம்களை ஏதோ ஒருவகையில் இந்தியர்கள் என்பதிலிருந்து தடுத்து வைக்கும் என்ற எண்ணத்தால்தான் அதற்கு எதிராகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

**- S. சுப்ரமணியன்**

# சாகாக் கலை

## எனப்படும்

# காயகல்பம்

### வள்ளலார் அருளிய கல்ப மருந்து

Dr. K. ராஜமாணிக்கம்



### ஆவாரம்பூ ஒரு அற்புத மூலிகை

இந்த ஆவாரம் பூ மருத்துவ இயல்பு மனித மரபணுக்களுடன் இணைந்து காலம் காலம்மாக நமக்கு பலனளிக்கும் தாவர வகைகளுள் ஒன்றும் இது பலருக்கு தெரியாது. சாதரணமான உதாரணம் அணுக்கதிர் தாக்கம் மரபணுக்களை தாக்கி பரம்பரை பரம்பரையாக நோயை உண்டாக்குகிறது, இந்த ஆவரம்பூ மரபணுக்களை தாக்கும் கதிரியக்கத்தை தாக்கும் பொருளாக இருக்கிறது, புற்று நோய் தாக்கும் செல்களை கட்டுப்படுத்தும் திறன் மற்றும் வெப்பமண்டல பிரதேசத்தில் சூரிய கதிரின் ஊடாக வீட்டில் புகும் ஆபத்தை விளைவிக்கும் கதிரியக்க சக்திகளை தடுத்து அவற்றை மீண்டும் வெளியே அனுப்பும் ஆற்றல் கொண்டது, இதன் மெல்லிய இலைகளின் மேல் சிலிக்கா படலமும் இந்த பூக்களின் நிறமியும் இந்த பணியை அற்புதமாக செய்ய இயற்கை நமக்கு தந்துள்ளது.

இதை பார்த்து விட்டு செல்பவர் பலர் கூறலாம் இது மிகைப்படுத்தப்பட்ட அல்லது ஓவர் டோஸ் கற்பனை என்று நினைக்கலாம், ஆவாரம் பூ கேன்சரை குணப்படுத்துமா அதற்கு என்ன ஆதாரம் என்றால் உலகில் பல நாடுகளில் உள்ள புற்று நோய் கழகத்தின் லோகோவில் உள்ள பூ இந்த கேசியா அரிக்குலடா என்ற ஆவாரம் பூ தான் ( Canadian Cancer Society Logo) இந்த நாட்டு புற்று நோய் கழக லோகோவில் ஆவாரம் பூ இதழ் மையத்தில் வெள்ளை நிறம் இப்பூவின் சக்தி ஒருங்கிணைந்த அடையாளம், ஆனால் கனடாவில் காணப்படும் கேசியா அறிக்குலாட்டா வை விட நம்ம ஊர் ஆவாரம்பூ வீரியம் மிக்கது, இனியாவது வாசலின் மேலே பாட்டி சொருகி வைத்த ஆவரம்பூ கொத்தை காய்ந்த சருகு என வீசாதீர்கள்.

ஆவரம் பட்டை, கஸ்தூரி மஞ் சள், ஒரு மிளகாய், சிறிது சாம்பராணி, நல்லெண்ணையுடன் (ஆவாரைத் தைலம்) காய்ச்சி, தலை முழுகி மதுமேகம் உடையவருக்கு காணும் தோல் வெடிப்பு, வறட்டசி, எரிச்சில் குணமாகும். ஆவாரம்பூ என்பது தங்கச்சத்துள்ளது என்பதால் தங்கத்திற்கு சமமாக கருதப்பட்டு விஷுக்கனி தரிசனத்தில் இடம் பெற்றுள்ளது சாதாரணமாக தங்க

பற்பத்தின் விலையும் அதிகம். தங்கத்தின் விலையும் அதிகம். சரியாக முடியாத தங்க பற்பம் சிறுநீரகத்தைப் பாதிக்கும். ஆனால் ஆவாரம்பூ என்பது இயற்கையால் இயற்கையாக முடித்து வைக்கப்பட்டுள்ள தங்க பற்பம். அதே சமயம் ஆவாரம்பூ மிக எளிதாக, விலையில்லாமல் அங்கங்கே பூத்துக் கிடக்கிறது.

ஒரு முறை மூலிகை ஆராய்ச்சி செய்ய கொல்லி மலைக்குச் சென்ற மாணவர்கள் அங்கே ஒரு சித்தரைக் கண்டார்கள். அவர் உடல் ஒளி வீசும் பொன்னிறமாக இருந்தது. அவரிடம் அந்த மாணவர்கள் கேட்டார்கள் உங்கள் ஒளி வீசும் பொன்னிற உடலுக்கு காரணம் என்ன என்று கேட்டார்கள் . அதற்கு அவர் சொன்னார்" ஆவாரம்பூ என்ற இந்த பொன் மூலிகைதான் எனது இந்த பொன்னிற ஒளி வீசும் உடலுக்கு காரணம்" என்றார். "ஆவாரம்பூ காலையில் ஒரு கைப்பிடி, மாலையில் ஒரு கைப்பிடி பல ஆண்டுகளாக சாப்பிட்டு வருகிறேன்" என்றார். "அதன் விளைவாக ஆவாரம்பூவில் உள்ள தங்கச் சத்து எமது உடலில் ஊறி உடல் இப்படி மாறியது" என்றார். அவ்வளவு சிறப்பு வாய்ந்த மூலிகை இந்த ஆவாரம்பூ.





ஆவாரம் பூவுடன் ஊற வைத்த பாசிப்பயறு சேர்த்து அரைத்து குளித்தால், நமைச்சல், துர்நாற்றம் நீங்கும். உடல் சூட்டினால் அவதிப்படுபவர்கள், ஆவாரம் பூ கசாயத்தை தவறாமல் குடித்து வந்தால், உடல் குளுமை அடையும். ஆவாரம் பூவை ஊறவைத்து, குடிநீர் தயாரித்து அருந்தினால் நாவறட்சி நீங்கும். கண் எரிச்சல் நீங்கும். உடல் சூட்டினால் கண் சிவந்து விடும். அவர்கள் ஆவாரம் பூவை உலர்த்திப் பொடித்து, நீர் விட்டு அரைத்து குழப்பி, படுக்கும் முன் கண் புருவத்தின் மீது பற்றுப் போட்டால் சிவப்பு நிறம் மாறும்.

ஆவாரம்பூக்களையும், கொழுந்தையும் சேர்த்து வெயிலில் காயவைத்து தூள் செய்து, அதில் நீர் ஊற்றி, அடுப்பில் வைத்து கஷாயம் இறக்கி பால் சேர்த்து பருகி வந்தால் நீரிழிவு நோய் கட்டுப்படும். ஆவாரம் பூக்களை சேகரித்து, பாசிப்பருப்புடன் சேர்த்து, சமைத்து சாப்பிட்டால் சர்க்கரை நோயின் தாக்கம் குறையும். காலை, மாலை, அரை தேக்கரண்டி பசு நெய் சேர்த்து சாப்பிட்டு வந்தால் மூலநோய் குணமடையும்.

**- தொடரும்**

# பெண்கள் பிசினஸில் ஜொலிக்காதது ஏன்?

எல்லா துறைகளிலும் பெண்கள் நுழைந்து சாதித்துக்கொண்டிருந்தாலும், பெரும்பாலான பெண்கள் இன்றும் தங்களுக்கான சுதந்திரத்தை வேண்டிப் பெறுபவர்களாகவே இருந்துகொண்டி ருக்கிறார்கள். வீடுகளில் எல்லா முடிவுகளையும் பெண்கள் எடுத்தாலும்கூட அவர்களுக்கான தொழில் அல்லது வேலை தொடர்பான முடிவு களை எடுக்கும்போதே அவர்களுக்குள்ளே தயக்கமும் பயமும் வந்துவிடுகின்றன. பிசினஸில் பெண்களின் இடம் என்ன? ஆனால், சந்தையோ முழுக்க, முழுக்க பெண்களைப் பிரதானமாகக் கொண்டே இயங்குகிறது. சீப்பு, சோப்பு முதல் ரவா, கோதுமை வரை, வாஷிங் மெஷின் முதல் வேக்வம் கிளீனர் வரை பெரும்பாலான விளம்பரங்கள் பெண்களை மட்டுமே மையப்படுத்துவதைப் பார்த்திருப்பீர்கள். இவைஎல்லாமே பெண்கள்தான் எல்லா வேலையும் செய்வது போலவும், அவர்கள் தான் குடும்பத்தை பராமரிப்பது மாதிரியும் சித்திரிக்கின்றன. குடும்பப்பராமரிப்பை விடுங்கள்; ஆண்கள் குளிப்பது கூட இல்லையா? பவுடர், ஷாம்பு போடுவதில்லையா? ஆண்கள் ஏன் விளம்பரங் களில் வஞ்சிக்கப்படுகிறார்கள்?

இதற்கான பதில் ரொம்பவே சுலபம். பெரும் பாலான பொருட்களை பெண்கள்தான் வாங்கு கிறார்கள். எந்தக் கடையில் வாங்குவது என்பதி லிருந்து எந்த பிராண்டைத் தேர்ந்தெடுப்பது என்பது வரை சர்வம் பெண்கள் கைங்கர்யமே. நம் வீடுகளில் பர்சேஸ் டிபார்ட்மென்ட்டின் நிரந்தர முதல்வர் பெண்களே. அதனால்தான் மளிகை கடை முதல் சூப்பர் மார்க்கெட் வரை, ஃபேன்சி ஸ்டோர் முதல் ஜவுளிக் கடை வரை அதிகமாக தென்படுவதும் அவர்களே. ஆண்களைக் காண ஆசைப்படுபவர்கள் பெட்டி கடை வெளியிலோ அல்லது டாஸ்மாக் உள்ளேயோ பார்க்க முடிகிறது. வீட்டிற்குத் தேவையான பொருட்கள் பெரும்பாலானவற்றை வாங்குவது பெண்கள் என்பதால் அவர்களே விளம்பரங்களில் முக்கியத்துவம் பெறுகிறார்கள். சரி, இது ஒருவகையில் நியாயமானது என்றே வைத்துக்கொள்வோம்.

இந்திய திருநாட்டில் மட்டும்தான் இந்த இருட்டடிப்பு என்றில்லை. அமெரிக்காவிலும் இதே கதிதான். 'Fortune 500' எனப்படும் அமெரிக்காவின் டாப் ஐந்நூறுகம்பெனிகளின் நிர்வாகக் குழுவில் இருக்கும் பெண்களின் எண்ணிக்கை வெறும், 15 சதவீதம்தானாம். நம்மூர் கிராமங்களில் மட்டும்தான் என்றில்லை கம்பெனிகளில் கூட பெண்களுக்கு கள்ளிப்பால் கொடுக்கப்படுகிறது பாருங்கள்! பெண்ணின்



மனதை புரிந்துகொள்ள முடியவில்லை என்று பள்ளி பருவதிலிருந்தே புலம்பி வருகிறோம். திருமணத்துக்கு பிறகு அதைப் புரிந்துகொள்ள முயல்வது முடியாத ஒன்று என்று முடிவு செய்து, அம்முயற்சியை மொத்தமாய் கைவிடுகிறோம். ஆனால், பணியிடங்களிலும் ஏன் இதன் முக்கியத்துவத்தை மறக்கிறோம்? சொந்த மனைவியையே புரிந்துகொள்ள முடியாத மார்க்கெட்டர்கள். மற்ற பெண்களை எப்படி புரிந்து, அவர்கள் தேவையை அறிந்து தங்கள் பிராண்ட் வடிவமைப்பிலிருந்து பொசிஷனிங் வரை, பாக்கேஜிங் முதல் விளம்பரங்கள் வரை அனைத்தையும் எப்படி திட்டமிட முடியும்? அவர்கள் பிராண்டுகளை வாங்கப்போவது பெண்கள்தான் என்ற பட்சத்தில் அவர்களைத் தங்களால் சரியாக புரிந்துகொள்ள இயலாது எனும் போது, தங்களுக்கு உதவ மார்க்கெட்டிங் துறையிலும் நிர்வாகத்திலும் பெண்களை அல்லவா அதிகம் நியமிக்க வேண்டும்?

நமக்கு பெண்களிடம் எந்த குணங்கள் பிடிக்காதோ அவைதான் மார்க்கெட்டிங் பணி செய்யஅவசியமானவை, நிர்வாகம் செய்ய முக்கியமானவை. மார்க்கெட்டிங்கில் உள்ள பல ஆண்கள் மார்க்கெட், வாடிக்கையாளர், போட்டி யாளர்கள் பற்றி அதிகம் தெரிந்து வைத்திருப்பது போல் நினைத்துக்கொண்டு அதிகம் கேள்விகள் கேட்டுத் தெரிந்துகொள்ளாமல் விட்டுவிடு கிறார்கள். இதனாலேயே பல கம்பெனிகள் வாடிக்கையாளர்களை சரிவர புரிந்துகொள்ளாமல் தவறான முடிவுகள் எடுக்கின்றன. கேள்வி கேட்கும் குணத்தில்பெண்கள் எப்படி என்பதுதான் கணவன்மார்களுக்கு கண்கலங்க தெரியுமே. கேள்வி கேட்டு, பதிலை எப்படி வாங்குவது என்பது பெண்களுக்கு கைவந்த கலை. பொருள் பிரிவு, வாடிக்கையாளர், போட்டியாளர் போன்ற வற்றைப் பற்றி தெரிந்திருந்தும் கேள்விகள் கேட்டு குடைந்து புதிய தகவல்கள் பெற பெண்கள்தான் சரியான தேர்வாக இருக்க முடியும்.

அதோடு மார்க்கெட்டிங் துறையில் பெண்களை அதிகம் சேர்த்துக்கொள்வதில் இன்னும் பல சவுகரியங்கள் உண்டு. ஒரே நேரத்தில் பல காரியங்களை செய்ய வேண்டிய சில துறைகளில் மார்க்கெட்டிங்கும் ஒன்று. டீவியில் சீரியல் பார்த்துக்கொண்டே சமையலும் செய்து, குழந்தை களுக்கு ஹோம் ஒர்க் சொல்லித் தந்து, கிடைத்த கேப்பில் துணிகளை வாஷிங் மெஷினில் போட்டு, பக்கத்து கடைக்கு ஃபோன் செய்து சாமான் ஆர்டர் செய்துகொண்டே பேப்பர் படிக்கும் நம்மிடம் பத்து வேலைகள் தந்து அதை செய்கிறோமா என்று வேவு பார்த்து, நாம் செய்யாத பட்சத்தில் திருமணம் செய்த நாளிலிருந்து நாம் செய்த தவறுகளை எல்லாம் கால வரிசைப்படி கரெக்ட்டாக ஸ்லோகம் சொல்வதுபோல் சொல்லிக்கொண்டே அறையை பெருக்கி துடைக்கும் அசகாய சூரர்கள் பெண்கள். இந்த அஷ்டாவதானிகளை மார்க்கெட்டிங்கில் சேர்த்துக்கொள்வது கம்பெனிகளுக்கு பிரமாதமாய் பயன் தரும்.



பெண்கள் கண்டிப்பாய் இருக்க வேண்டிய இன்னொரு இடம் பொருள் வடிவமைப்பு துறை. குறிப்பாக பெண்கள் அதிகம் உபயோகிக்கும் பொருட்களின் பாக்கேஜிங்கை வடிவமைக்கும் போதும் பெண்களின் பங்களிப்பு அதில் அசாத்திய பயன் தரும். பொதுவாகவே பெண்களுக்கு அழகுணர்ச்சி அதிகம். அவர்களை விட்டு நீங்களும் நானும் மட்டும் பொருளை வடிவமைத்தால் எப்படி இருக்கும்? இதையெல்லாம் சொல்வதால் சாஸ்திரத்துக்கு மட்டும் ஏதோ ஒரு பெண்ணை பிடித்து மார்க்கெட்டிங் துறையிலோ நிர்வாகத்திலோ அமர்த்தி 'நீ சொன்னது போல் செய்துவிட்டேன், பெண் உரிமை வாழ்க' என்று அதோடு உங்கள் வேலைமுடிந்தது போல் பேசாமல் இருந்து விடாதீர்கள். ஆய்வு ஒன்றில் கம்பெனி நிர்வாக போர்டுகளில்ஒரே ஒரு பெண்மணி மட்டும் இருக்கும்போது மீட்டிங்குகளில் அவர் பேசக் கூச்சப்பட்டு அதிகம் பங்களிக்காமல் அமைதியாக இருப்பதையும், குறைந்தது மூன்று பெண்கள் போர்டு மீட்டிங்குகளில் இருக்கையில் தைரியமாக கேள்விகள் கேட்டு அதிகம் பங்களித்து நல்ல முடிவுகள் எடுக்க முடிவதையும் கண்டுபிடித்திருக் கின்றனர். அதனால் உங்கள் மார்க்கெட்டிங் முதல் நிர்வாகம் வரை முடிந்தவரை கொஞ்சம் கூடுதலாகவே பெண்களை நியமியுங்கள். உங்கள் பிசினஸும்பிராண்டும் நீண்ட காலம் நிலைத்து இருக்கும்.

**– சச்சின்**



# சிந்தனை முத்துக்கள்



தளபதி மட்டும்
சுதந்திரத்துக்கு முன்னாடி
பிறந்து இருந்தா...

கோலம் போட்டே
வெள்ளைகாரனை விரட்டி
இருப்பார் இல்லடா...!!!😂😂






""என் மகன் ரொம்ப
புத்திசாலி. ஒரு
தீப்பெட்டி வாங்கினா
அதுல ஐம்பது குச்சி
இருக்கான்னு
எண்ணிப்
பார்த்துதான்
வாங்கிட்டு வருவான்."

""என் மகன் உங்க
மகனைவிட
புத்திசாலி. எல்லா
குச்சியும் எரியுதான்னு
கொளுத்திப்
பார்த்துட்டுதான்
வாங்கிட்டு வருவான்."


வாழ்க்கை என்பது
புத்தகம் போல
அதில் முதல் பக்கம்
கருவறை
கடைசி பக்கம் கல்லறை
இடையில் உள்ள
பக்கங்களை
கண்ணீரால் வாசிக்காதே
புன்னகையால்
வாசி

அம்மாவின் வலியை ஐந்து வயதில்
கூட உணரலாம்!!



ஆனால் ஒரு தந்தையின் வலியை !
நீ ஒரு தந்தையானால் மட்டுமே
உணர முடியும்!!

ஏன்னே, கலர் கலரா டிரஸ் போட்டு
பாதயாத்திரை போறீங்களே,
ஐயப்பனுக்கா, முருகனுக்கா 😁



யோவ், நாங்களே பொங்கலுக்கு
பஸ்சு கிடைக்காம ஊருக்கு
நடந்து போறோம்யா.. 😠



நல்லாட்சி நடைபெறும்
மாநிலங்களின் பட்டியலில்
தமிழகம் முதலிடம்!
__செய்தி

நல்லாட்சி நடக்கும் நமக்கே
இந்த நிலமைனா மத்த
ஸ்டேட் காரன் எல்லாம்
உயிரோடு இருப்பான்னு
நினைக்கிற

ரெம்ப நாள் டவுட்

1. நீருக்கு அடியில் அழ முடியுமா?
2. மீன்களுக்கு தாகம் எடுக்குமா?
3. பறவைகள் ஏன் தூங்கும்போது மரத்திலிருந்து விழுவதில்லை?
4. பணம் மரத்தில் இருந்து வருவதில்லை பின் ஏன் வங்கிகள் எங்களுக்கு கிளைகள் உள்ளன என்கின்றன?
5. பசை ஏன் பாட்டிலுக்குள் ஒட்டி கொள்வதில்லை?
6. வட்ட வடிவ பீட்சா ஏன் சதுர பெட்டியில் வருகிறது?
7. ஐ லவ் யூ என்பது கேள்வியே அல்ல .. பின் ஏன் அனைவரும் அதற்கு பதில் எதிர்பார்க்கிறார்கள்..

இத கேட்டா அடிக்க வர்றாங்க...

ஒருத்தன் வேகமா ரோட்ல
பைக்ல போகும்போது ஒரு
கிளி மேல மோதிட்டான்,
கிளி அடிபட்டு மயக்கமாகி
விழுந்துட்டுது! அந்த பையன்
கிளிமேல பாவப்பட்டு
அதுக்கு வைத்தியம் பாத்து,
ஒரு கூன்டுல சாப்பாடு
போட்டு பத்திரமா
வச்சிருந்தான்! முழிச்சு
பாத்த கிளி நினைச்சுதாம்
"அய்யய்யோ நாம
மோதினதுல பையன் SPOT
OUT போல! நம்மள பிடிச்சு
ஜெயில் ல போட்டுடாங்க"
அப்புடின்னு!



**நீரோடைக்கும் பாறைக்கும் இடையே நடக்கும் இடைவிடாத போராட்டத்தின், இறுதியில் நீரோடை வெற்றி பெறுகிறது.**
**தனது பலத்தினால் அல்ல, தொடர் முயற்சியினால்!**

விலை மதிப்பற்ற செல்வம் அறிவு!

பலமான ஆயுதம் பொறுமை!

மிகச் சிறந்த பாதுகாப்பு உண்மை!

அற்புதமான மருந்து சிரிப்பு!

**சின்ன நெருப்பாய் திறமை இருந்தால் காற்று அதனை அணைக்கும்...**

**காட்டு நெருப்பாய் திறமை இருந்தால் காற்று அதனை வளர்க்கும்....!**

போன வருஷம் நமக்கு நடந்த நல்ல விஷயம்...



நம்ம உசுரோட இருக்குறதுதான்.. 😊 😊


வாழக்கையில பெருமைக்குரிய தருனம்

நான் ஒன்னுமே தெரியாம எக்ஸாம் எழதும் போது




டீச்சர் சொல்லுவாங்க உன் பேப்பர மறைச்சி எழது பின்னால இருக்கவன் உன் பேப்பர பாக்குறான்

ஒரு கிலோ தேனை பெறுவதற்காக தேனீக்கள் 4 மில்லியன் பூக்களை சந்திக்கிறது....



அற்ப மனிதன் ஒரு தோல்விக்கே துவண்டு விடுகிறான்...!

எவரையும் சாதாரணமாக
நினைத்து விடாதே
எவருக்குத் தெரியும்
இன்று நீ
மிதித்து விட்டு போகும்
கல்லே கூட
நாளை நீ போகும்
கோவிலில் தெய்வமாக
வந்து உட்காரலாம்
இதை போல் தான் மனித
வாழ்க்கையும்




முள் குத்தினாலும் கத்தும் நாம்,
டாக்டர் ஊசி போடும்போது மட்டும் தாங்கிக்குவோம்...

வலி என்னமோ ஒன்னுதான் ஏற்றுக் கொள்ள துணிந்துவிட்டால்
வலிகளும்,வேதனைகளும் தூசிதான்...!

**கண்ணுக்கு தெரிந்த மனிதரை மதிக்காவிட்டால்...**
**கண்ணுக்கு தெரியாத கடவுளை மதித்தும் பயன் இல்லை...**



# வறட்சியிலிருந்து இந்தியா பாடம் கற்றிருக்கிறதா?

கடந்த ஆண்டு நாடு முழுவதிலும் கோடைக் காலத்தில் ஏற்பட்ட கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறையை அடுத்து, 'ஜல் சக்தி அபியான்' (ஜேஎஸ்ஏ) என்ற திட்டத்தை மத்திய அரசு தொடங்கியது. தண்ணீர்ப்பற்றாக்குறை மிகுதியாக உள்ள 255 மாவட்டங்களில் இரண்டு கட்டங்களாக அமல்படுத்தக்கூடிய, காலவரம்புள்ள திட்டத்தை அரசு அறிவித்தது. 'மழை நீரைச் சேகரிப்போம்' என்ற பிரச்சாரம் அதில் முக்கிய இடம்பெற்றது. இந்தப் பிரச்சாரத்துக்கு மத்திய, மாநில அரசுகள் பணம் ஒதுக்கும்படியாக இது வகுக்கப்படவில்லை. தண்ணீரைச் சேமிப்பதற்காகப் புதிய உத்தி எதையும் மத்திய அரசு வகுக்கவில்லை. 'மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்'போல இதை மக்களுடைய இயக்கமாக ஆக்குவது மட்டுமே அரசின் நோக்கமாக இருந்தது.

தருண் பாரத் சங்கம் என்ற தன்னார்வ அமைப்பு ராஜஸ்தான் மாநிலத்தின் ஆல்வார் மாவட்டப் பகுதிகளிலும், மகாராஷ்டிரத்தின் ராலேகான் சித்தி மாவட்டத்தில் அண்ணா ஹசாரே தலைமையிலான அமைப்புகளும் மழைநீரைச் சேமிப்பதிலும் தண்ணீரை வீடுகளுக்குப் பகிர்ந்தளிப்பதிலும் மேற்கொண்ட திட்டங்களைப் போல நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அடிப்படையில்தான் ஜேஎஸ்ஏ கொண்டுவரப்பட்டது. கிராமங்களிலும் சிறு நகரங்களிலும் குட்டைகளையும் குளங்களையும் புதிதாக அமைப்பது, ஏற்கெனவே உள்ளவற்றை ஆழப்படுத்திக் கரைகளை உயர்த்திக் கட்டுவது, நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த ஆங்காங்கே நிலத்தில் பள்ளங்களைத் தோண்டி அதில் சரளைக் கற்கள், செங்கல் கழிவுகள் போன்றவற்றை இட்டு நிரப்புவது ஆகியவை ஜேஎஸ்ஏ திட்டப் பணிகளில் முக்கியமானதாக இருக்கிறது. நீர்நிலை மேலாண்மைத் திட்டங்களுடனோ, நிலத்தடி நீர்மட்டம் தொடர்பான நீரியியல் வரைபடத்துடனோ ஜேஎஸ்ஏ இணைக்கப்பட்டதைப் போலத் தெரியவில்லை.

தண்ணீர் வளம் தொடர்பான எதுவும் ஆற்றுப்படுகைகள் போன்ற நீர்வள அமைப்பை அடிப்படையாகக் கொண்டே திட்டமிடப்பட வேண்டும். மாவட்டங்களை மையமிட்டதாக இத்திட்ட வரையறை அமைக்கப்பட்டது இதன் பெரும் பலவீனம். மாவட்டங்களின் அரசியல், நிர்வாக எல்லைகள் ஆறுகள், ஏரிகள் போன்றவற்றின் நீர்ப்பிடிப்பு, நீர்த்தேக்க எல்லைகளுடன் பொருந்திவராது. அந்த மாவட்ட எல்லைக்குள் அனைத்தையும் ஒரே அதிகாரி கண்காணிப்பார். ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்டங்களில் ஏரியோ ஆறோ பரந்துபட்டதாக இருக்கும்போது இந்த நிர்வாகத்தில் ஒருங்கிணைப்பும் ஒத்திசைவும் அமைவதில்லை. இதனால், ஒரே ஆற்றுப்படுகை பல நீர்த் துறைப் பிரிவுகளாகப் பிரிக்கப்படும். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமாக நீர்மேலாண்மை மேற்கொள்ளப்படும்.

ஆற்றுப்படுகையில் மழைப்பொழிவு எவ்வளவு, தரையில் வழிந்தோடும் நீரின் அளவு எவ்வளவு, ஆற்றில் கலப்பவை எவ்வளவு,

நிலத்தடியில் ஊறுவது எவ்வளவு என்ற புள்ளிவிவரங்கள் மாவட்டங்களில் கிடையாது. அத்துடன் மழையளவு, மழை பெய்யும் நாள்கள், மழைக்காலப் பருவம் போன்ற தகவல்களும் எல்லா மாவட்டங்களிலும் பராமரிக்கப்படுவது கிடையாது. எனவே, சராசரியாகப் பெய்யும் மழையில் எவ்வளவு சேமிக்கப்பட முடியும், எவ்வளவு நீர்நிலைகளுக்குச் செல்கிறது, எவ்வளவு வீணாகிறது என்பதில் தெளிவு இருப்பதில்லை. நிலத்தடி நீர்மட்டம் தொடர்பான வரைபடங் களும் மாவட்டங்களில் கிடையாது. எனவே, பிற மாவட்டங்களுக்குப் போக வேண்டிய தண்ணீர் ஒரே மாவட்டத்தின் ஏரியிலோ குளத்திலோ சேமிக்கப்படுவதும் நடக்கிறது. இவையெல்லாம் நம் மாவட்ட நிர்வாகங்கள் எதிர்கொள்ளும் போதாமைகள்.

இந்தியாவின் பெரும்பாலான வடிநிலங்கள், அதிலும் குறிப்பாகத் தென்னிந்திய தீபகற்பத்தில் உள்ள ஆற்று வடிநிலங்களில், தண்ணீர் கிடைக்கும் அளவைப் போல பல மடங்குக்கு நீருக்குத் தேவை நிலவுகிறது. இதனால், நிலத்தடிநீர் தொடர்ந்து உறிஞ்சப்படுவதால், நீர் வற்றி வறண்டுவருகிறது. ஜேஎஸ்ஏ இதைக் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. எனவே, தரையில் வழிந்தோடும் நீரை, நிலத்தடி நீராகச் சேமித்துள்ளனர். சில இடங்களில் நிலத்தடிக்கு நீரே செல்லாமல், வழிந்தோடும் நீராகவே கடந்துசெல்லவும் அனுமதிக்கப்பட்டி ருக்கிறது. இதற்கெல்லாம் மூல காரணம், ஆற்றுப்படுகைகள் குறித்த தகவல்களும் தரவு களும் இல்லாத நிலையும், இதில் சுயாதிகாரத்துடன் செயல்படும் சுதந்திரம் அரசுத் துறைகளுக்கு இல்லாமையும்தான்.

ஜேஎஸ்ஏவின் நோக்கமும் லட்சியமும் பாராட்டத்தக்கவை. ஆனால், அதன் கற்பிதங்கள் பிழையானவை. உதாரணமாக,




கிராமப்புற மக்களுக்கு மழைநீர் சேகரிப்பு பற்றித் தெரியாது, அவர்கள் தண்ணீரை வீணாக்குவார்கள் என்றெல்லாம் ஜேஎஸ்ஏ நம்புவது வெளிப்படுகிறது. குடிப்பதற்கும் விவசாயத்துக்கும் கால்நடைகளுக்கும் தண்ணீர் இல்லாவிட்டால் படும் துயரம் பெரிது என்று முதலில் அறிந்து அச்சப்படுகிறவர்களே கிராம மக்கள்தான். கிராமப்புறங்களில் நபர்வாரியாக 55 லிட்டர் தண்ணீர் போதும் என்று கருதும் அரசு டெல்லி, பெங்களூரு போன்ற மாநகரங்களில் வசிப்போருக்கு நபர்வாரியாக 135 முதல் 150 லிட்டர் வரை தேவை என்கிறது.

ஆகவே, ஏழைகளையும் கிராமப்புற மக்களையும் அணுகி, மழை நீரைச் சேமியுங்கள் என்று சொல்வது பொருத்தமில்லாதது. பெருநகரங்களிலும் சிறு நகரங்களிலும் வீடுகளி லிருந்து வெளியேறும் கழிவுநீரை சுத்திகரித்து மறுபயன்பாட்டுக்குக் கொண்டுவராமல் ஏரிகள், குளங்கள், குட்டைகள், கிணறுகளில் கலக்க விட்டுவிட்டு கிராம மக்களிடம் போய், நீரைச் சேமியுங்கள் என்று சொல்வது மிகையான பிரச்சாரமாகவே இருக்கும்.

மழைநீர் சேகரிப்புக்காகக் குளம், குட்டை, ஏரிகளைச் சுற்றி மண்ணால் எழுப்பியிருக்கும் கரை கிராம மக்கள், கால்நடைகள், கிராமப்புற வாகனங்கள் ஆகியவற்றால் இடியவும் சிறு மழைக்குக்கூடக் கரையவும் வாய்ப்பு இருக்கிறது. இந்தக் கட்டுமானங்களைப் பொறியாளர்கள் மேற்பார்வையிடுகின்றனரா என்பதும் சந்தேகமே. அத்துடன் தண்ணீர் சேகரிப்பு, நீர்நிலைப் பராமரிப்பு என்று பல்வேறு துறைகளிடையே இதில் ஒருங்கிணைப்பும் கிடையாது. இதைவிட, தண்ணீர் அதிகம் தேவைப்படும் நெல், கரும்பு, வாழை ஆகியவற்றைச் சாகுபடி செய்து நிலத்தடிநீரை மேலும் வற்றச் செய்ய வேண்டாம் என்று விவசாயிகளிடம் கூறலாம். மழைக்குப் பிறகு கிடைக்கும் புதிய தண்ணீரில் 80% விவசாயத்துக்குத்தான் பயன்படுத்தப்படுகிறது என்பதால் இந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிகவும் அவசியம்.

2019 கோடைக் காலத்தில் ஏற்பட்ட தண்ணீர்ப் பற்றாக்குறை இப்போது மறக்கப்பட்டு விட்டது. அரசின் கொள்கை வகுப்பாளர்கள் அதிலிருந்து பாடம் கற்றதைப் போலத் தெரியவில்லை. எல்லாம் சரியாகிவிட்டது என்ற பாவனையில் அரசும் மக்களும் தங்களுடைய பழைய வேலைகளுக்குத் திரும்பிவிட்டனர்.

- M. **தரணி**

# இணைய பணப் பரிவர்த்தனை தொடர்பான புகார்களை அளிக்க

# தமிழகம் உள்ளிட்ட 19 மாநிலங்களில் 21 புகார் மையம்

## இந்திய ரிசர்வ் வங்கி திட்டம்



இணையவழி பணப் பரிவர்த்தனை தொடர்பான புகார்களை அளிப்பதற்காக, தமிழகம் உள்ளிட்ட 19 மாநிலங்களில் 21 புகார் மையங்களை அமைக்க இந்திய ரிசர்வ் வங்கி திட்டமிட்டுள்ளது. மத்திய அரசு கறுப்பு பணத்தை ஒழிப்பதற்காக, பணமதிப்பு நீக்கத்தை அறிமுகப்படுத்தியது. அதன் பிறகு, பணமில்லா பரிவர்த்தனையை அதிக அளவில் ஊக்குவித்து வருகிறது. இதற்காக டெபிட், கிரெடிட் கார்டு மற்றும் இ-வேலட், யுபிஐ உள்ளிட்டவை மூலம் மின்னணுப் பணப் பரிவர்த்தனை செய்பவர்களுக்கு ஊக்கத் தொகை, தள்ளுபடி உள்ளிட்ட சிறப்பு சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒருபுறம் மின்னணு பணப் பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் அதே வேளையில், மற்றொருபுறம் மின்னணு பணப் பரிவர்த்தனை தொடர்பாக ஏராளமான மோசடிகளும் அரங்கேறி வருகின்றன. குறிப்பாக, இணையதள பணப் பரிவர்த்தனையின்போது மோசடிகள் அதிக அளவில் நடைபெறுகின்றன. இத்தகைய இணையதள பணப் பரிவர்த்தனை மோசடிகள் தொடர்பாக பொதுமக்கள் புகார் அளிக்க வசதியாக, இந்திய ரிசர்வ் வங்கி சிறப்பு புகார் மையங்களை அமைக்க உள்ளது.

இதுகுறித்து, ரிசர்வ் வங்கி அதிகாரிகள் கூறியதாவது: பணமதிப்பு நீக்க நடவடிக்கைக்குப் பிறகு, இன்றைக்கு டிஜிட்டல் டிரான்ஸ்சாக்ஷன் எனப்படும் மின்னணுப் பண பரிவர்த்தனை முறை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தி, பொதுமக்கள் ஆன்லைன் ஷாப்பிங் இணையதளம் மூலம் தங்களுக்குத் தேவையான குண்டூசி முதல் விலை உயர்ந்த ஆபரண தங்கங்கள் வரை வாங்குகின்றனர்.

ஒருசில நிறுவனங்கள் மட்டும் இணையதள விற்பனையை நம்பகத்தன்மையோடு நடத்தி வருகின்றன. சில நிறுவனங்கள் மோசடியில் ஈடுபடுகின்றன. இதனால், பொதுமக்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் சம்பந்தப்பட்ட இணையப் பரிவர்த்தனை நிறுவனங்களின் வாடிக்கையாளர் சேவை மையங்களைத் தொடர்பு கொண்டு புகார் அளிக்கும்போது, ஆங்கிலம், இந்தி மொழிகளிலேயே புகார்களைப் பெறுகின்றன.

அத்துடன், அவர்களுக்கான தீர்வும் எளிதாகக் கிடைப்பதில்லை. இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில், தமிழகம் உள்ளிட்ட 19 நகரங்களில் 21 குறைதீர்க்கும் மையங்களை அமைக்க, ரிசர்வ் வங்கி முடிவு செய்துள்ளது. இதற்காக, தனி அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு, அவர் பொதுமக்களின் புகார் தொடர்பாக விசாரித்து துரிதமாகத் தீர்வு காண்பார்.

ஆன்லைனில் பணம் செலுத்தும்போது அல்லது அந்த பணப் பரிமாற்றத்தின்போது பிரச்சினை ஏற்பட்டாலோ, அங்கீகரிக்கப்படாத மின்னணு பரிவர்த்தனைகள், தோல்வியுற்ற

பரிவர்த்தனைக்கான பணத்தை மீண்டும் தங்கள் வங்கிக் கணக்கில் இணையப் பரிவர்த்தனை நிறுவனம் திருப்பிச் செலுத்தாதபோது, பரிவர்த்தனை செய்யும்போது அதை குறிப்பிட்ட கால அவகாசத்துக்குள் நிறுத்தும் வசதியை வழங்காதது உள்ளிட்ட புகார்களை இந்த மையத்தில் அளிக்கலாம்.

மேலும், இணைய பரிவர்த்தனை தொடர்பான புகார்களை முதலில் சம்பந்தப் பட்ட இணையதள நிறுவனங்களிடம் அளிக்க வேண்டும். அந்தப் புகார் மீது 30 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்காமல் இருந்தாலோ அல்லது புகார் நடவடிக்கைமீது திருப்தி ஏற்படாமல் இருந்தாலோ இந்த மையத்தில் புகார் அளிக்கலாம். புகார் அளிப்பதற்கு முன்பு, அதற்கான ஆதாரங்களை சேகரித்து வைத்துக் கொண்டு புகார் அளிக்க வேண்டும். விசாரணையின்போது, புகார்தாரர் வழக்கறிஞர் அல்லாத தங்களுக்கு நம்பிக்கைக்கு உரிய ஒருவரைக் கூட அனுப்பித் தீர்வு காணலாம்.

விசாரணையில் இருதரப்பினருக்கும் இடையே சமரசம் ஏற்படாதபோது, புகார்தாரர் தனக்கு ஏற்பட்ட மனஉளைச்சல், புகார் அளித்ததற்கான செலவு என அனைத்துக்கும் சேர்த்து அதிகபட்சமாக ரூ.20 லட்சம் வரை நஷ்டஈடு கோரலாம்.

இணைய பரிவர்த்தனையில் பிரச்சினை ஏற்பட்டு, சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் புகார் அளித்து 13 மாதங்களுக்குள் புகார் மையத்தை அணுக வேண்டும். இந்தக் குறைதீர்ப்பு மையத்தில் வழங்கப்படும் தீர்வு திருப்தியாக இல்லாத பட்சத்தில், தீர்வு வழங்கப்பட்ட 30 நாட்களுக்குள் ரிசர்வ் வங்கியின் குறைதீர்ப்பாளரை (ஆம்புட்ஸ்மேன்) அணுக வேண்டும். அவர் அளிக்கும் தீர்விலும் திருப்தி ஏற்படவில்லை என்றால், இறுதியாக நுகர்வோர் நீதிமன்றத்தை அணுகி தீர்வு காணலாம். இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

**- ராஜேந்திரன்**

# செயல் அலுவலர்கள் காலி பணியிடங்களால்

## தமிழகத்தில் ஆயிரம் கோயில்களை நிர்வகிக்க முடியாமல் அதிகாரிகள் திணறல்

செயல் அலுவலர்கள் காலி பணியிடங்களால் 4 ஆயிரம் கோயில்களை நிர்வகிப்பதில் தொடர்ந்து சிக்கல் நிலவுகிறது. தமிழகத்தில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் 44 ஆயிரம் கோயில்கள் உள்ளது. இதில், 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரதான கோயில்கள் அடக்கம். இக்கோயில்களை நிர்வகிக்க இணை ஆணையர் 11, துணை ஆணையர் 9, செயல் அலுவலர் 415 உட்பட 628 பணியிடங்கள் உள்ளது. இதில், 200க்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாக உள்ளது. இந்த நிலையில் பல்வேறு காரணங்களை கூறி செயல் அலுவலர்கள் பலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவர்கள் மீது உரிய விசாரணை நடத்தி 6 மாதங்களுக்குள் நடவடிக்கை எடுத்து இருக்க வேண்டும். ஆனால், தற்போது வரை செயல் அலுவலர்கள் மீதான விசாரணை நிலுவையில் உள்ளது. ஏற்கனவே, காலி பணியிடங்களால் செயல் அலுவலர்கள் தவித்து வரும் நிலையில் தற்போது, 1 செயல் அலுவலர் 10 முதல் 20 கோயில்களின் நிர்வாக பணிகளை கவனிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு பயந்து போய் ஒரு சில செயல் அலுவலர்கள் விடுப்பில் சென்று விட்டனர். இந்த நிலையில் கோயில்களுக்கு சொந்தமான கட்டிடங்கள் மூலம் வருவாய் ஈட்டுவது, ஆக்கிரமிப்புகளை தடுப்பது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து திருக்கோயில் நிர்வாக அதிகாரிகள் சங்க நிர்வாகிகள் கூறுகையில், குற்றம் சுமத்தப் பட்ட செயல் அலுவலர்களுக்கு பதில் அளிக்க வாய்ப்பு தர வேண்டும். மேலும் 6 மாத காலத்திற்குள் விசாரணை முடித்து பதவி வழங்க வேண்டும். ஓய்வு பெறுவதற்கு 1 ஆண்டு காலத்திற்குள் நிலுவை குற்றச்சாட்டுகளை விசாரணை செய்து முடிவுக்கு கொண்டு வர வேண்டும். நீண்ட காலமாக சஸ்பெண்டில் உள்ளவர்களது விசாரணையை முடித்து அல்லது விசாரணையை நிலுவையில் வைத்து 31.1.2020க்குள் பணியமர்த்த வேண்டும். இல்லையெனில் அடுத்தகட்டமாக விரைவில் போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளோம்' என்றனர்.

**- S. மோகன்**

# அழிந்து வருகிறதா பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம்?



தமிழகத்தில் சுதந்திரத்திற்கு முன்பு, 1000 ஆண்களுக்கு 1044 பெண்கள் என்ற ரீதியில் பிறப்பு விகிதம் இருந்தது. இது கடந்த 50 ஆண்டுகளில், 5 முதல் 8 சதவீதம் வரை சரிந்துள்ளது. 2004ம் ஆண்டில் 1000 ஆண்களுக்கு 936 பெண்கள் என்றிருந்த விகிதம், 2011ம் ஆண்டில் 1000க்கு 853 என அடிமட்டத்துக்கு சென்று விட்டது. பல்வேறு விழிப்புணர்வுகள், அரசின் அதிரடி நடவடிக்கைகள் காரணமாக, 2011-12ம் ஆண்டில் இந்த விகிதம் 1000க்கு 932 என்று மாறியது. 2012-13ம் ஆண்டில் 1000க்கு 918 என இருந்த பாலின விகிதம், 2015-16ம் ஆண்டுகளில் 1000க்கு 912ஆக சரிந்தது. 2016-17ம் ஆண்டு செப்டம்பரில் 1000க்கு 911 என்று குறைந்துள்ளது. தமிழக மாவட்டங்களை பொறுத்தவரை சேலம், தர்மபுரி, திருவண்ணாமலை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் வெகுவாக குறைந்து வருகிறது என்ற அதிர்ச்சி தகவலையும் வெளியிட்டுள்ளனர் சைல்டு லைன் அமைப்பினர்.

இந்நிலையில் நாடு முழுவதும் குடிமைப் பதிவு அமைப்பு முறையில், பதிவு செய்யப்பட்ட பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் குறித்த விவரங்களை தலைமைப் பதிவாளர் அலுவலகம் வெளியிட்டுள்ளது. அதில், தமிழகத்தில் பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் கடந்த 10 ஆண்டுகளில் 10.16 சதவீதம் குறைந்துள்ளதாக தெரியவந்துள்ளது. தென்னிந்தியாவைப் பொறுத்தவரை கேரளத்தைத் தவிர மற்ற அனைத்து மாநிலங்களிலும் பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் குறைந்துள்ளது. தமிழகத்தில் பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் குறைந்ததற்கு கருவிலிருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா? என்பதைக் கண்டுபிடிப்பதற்கு அதிநவீன கருவிகள் வந்து விட்டது தான். பெண் குழந்தைகளாக இருந்தால் கருவிலேயே அழிக்கப்படுவதும் தொடர்கிறது என்பது வேதனை அளிக்கும் உண்மை.

அதுமட்டுமின்றி, செயற்கை முறை கருத்தரிப்பின் போது ஆண் குழந்தைகளை உருவாக்கச் செய்தல், ரத்தம் மூலமான மரபணு ஆய்வின் மூலம் குழந்தைகளின் பாலினத்தைக் கண்டறிதல் ஆகியவையும் நவீன மருத்துவத் தொழில்நுட்பத்தின் மூலம் இப்போது சாத்தியமாகியுள்ளது. இவை சட்டப்படி தடை செய்யப்படவில்லை என்பதால் இவையும் பெண் குழந்தை பிறப்பு விகிதம் குறைவதற்கு காரணமாகின்றன. இவை அனைத்தும் பெண் குழந்தைகளை தவிர்ப்பதற்கான வழிமுறைகள் தான். அதேநேரத்தில் பெண் குழந்தைகள் எதிர்காலச் சுமைகள் என்ற எண்ணத்தை மக்களின், குறிப்பாக கிராமப்புற மக்களின் மனங்களில் இருந்து அகற்றுவது தான் இப்பிரச்னைக்கான நிரந்தரத் தீர்வாக அமையும். கிராமப்புறங்களில் வாழும் ஏழை மக்களிடையே பெண் குழந்தைகளின் கல்வி, திருமணம் போன்றவை செலவு பிடிக்கும் விஷயங்களாக இருப்பதும், பெண்களை வளர்த்தெடுக்கும் போது அவர்கள் எதிர் கொள்ளும் பிரச்னைகளும் தான் பெண் குழந்தைகளைசுமையாக நினைக்க வைக்கின்றன. இந்த எண்ணத்தை மாற்றவும், பெண் குழந்தைகள் சாபமல்ல... வரம் என்ற எண்ணத்தை

ஏற்படுத்தவும் விழிப்புணர்வு பரப்புரைகள் மேற்கொள்ள வேண்டும். இதுவே அபாய அவலங்களை கட்டுப்படுத்த வழிவகுக்கும் என்பது ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளோரின் ஆதங்கம்.

கடந்த 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்திய அளவில் 24 முதல் 35 வயதுக்குட்பட்ட 30 சதவீத ஆண்கள், திருமணம் செய்யாமல் இருக்கின்றனர் என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு மணமுடிக்க பெண் கிடைக்காததே முக்கிய காரணம் என்கின்றனர் ஆய்வாளர்கள். பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் குறைந்துகொண்டே சென்றால் எதிர்காலத்தில் ஆண்களுக்கு மணமுடிக்க பெண்கள் கிடைக்கமாட்டார்கள்.

**2018ல் குறைந்த பாலின விகிதம்:** தமிழகத்தில் கடந்த 2018ம் ஆண்டு 10.16 சதவீதம் அளவு பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் குறைந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 2007ம் ஆண்டு 1,000 ஆண்களுக்கு 935 பெண்கள் என்ற எண்ணிக்கையில் ஆண் பெண் பிறப்பு விகிதம் இருந்தது. ஆனால் அது 2016ம் ஆண்டு 840 என்ற அளவில் குறைந்தது. 2018ம் ஆண்டு 933 ஆக உயர்ந்தது என்றாலும் சேலம், ராமநாதபுரம், திருவள்ளூர், அரியலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் 35 முதல் 48 வரை குறைந்துள்ளது. சென்னை, கோவை போன்ற வளர்ந்த நகரங்களிலும் இந்த அவல நிலை தொடர்வது குறிப்பிடத்தக்கது.



**பெண் குழந்தைகள் பிறப்பு**

**சேலம் சரக லேட்டஸ்ட் விகிதம்**

| பாலினம் | ஆண் | பெண் |
|---|---|---|
| சேலம் | 1000 | 915 |
| நாமக்கல் | 1000 | 926 |
| தர்மபுரி | 1000 | 943 |
| கிருஷ்ணகிரி | 1000 | 958 |

ஆண் குழந்தை பிறந்தால் பெண்ணுக்கு ஆர்வமில்லை "ஒரு தம்பதிக்கு முதலில் ஆண் குழந்தை பிறந்தால், அடுத்து பெண் குழந்தை பெற்றுக்கொள்ள அவர்கள் ஆர்வம் காட்டுவதில்லை. கருவில் தொடங்கி கர்ப்பிணியாகும் வரை, கர்ப்பிணிகளுக்கு அரசு பல்வேறு சலுகைகளை வழங்குகிறது. இது தொடர்பான விழிப்புணர்வும் அதிகரித்துள்ளது. தொட்டில் குழந்தைகள் மையத்திற்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கை சரிந்ததற்கு இதை ஒரு காரணமாக கூறலாம். ஆனால், கருவிலேயே பாலினம் கண்டறிந்து பெண் சிசுவை சிதைக்கக் கூடாது என்ற எண்ணம், ஒவ்வொரு பெற்றோர் மனதிலும் வரவேண்டும். அப்போது தான் சரிந்து வரும் பெண் குழந்தை பிறப்பு விகிதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்," என்கின்றனர் மருத்துவர்கள்.

**25 கர்ப்பிணிகளில் ஒருவர் கருகலைப்பு:** தமிழக சுகாதாரத் துறை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், "25 கர்ப்பிணி பெண்களில் ஒருவர் கருகலைப்பு செய்வதாகத் தெரிவித்துள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சி வரமா, சாபமா என்ற பட்டிமன்றம் நிச்சயம் இந்த விஷயத்தில் அவசியமாகிறது. பெண் குழந்தைகளை கருவிலேயே கலைப்பது அதிகரித்துள்ளது. கிராமப்புறங்களில் போலி மருத்துவர்கள் கருக்கலைப்புகளை அதிக அளவு செய்து வருகின்றனர். அவ்வப்போது அவர்கள் கைது செய்யப்பட்டாலும், முழுமையாக அவர்களைத் தடுக்க முடியவில்லை," என்பது வேதனை.

- V. அருணாச்சலம்

# புத்தாண்டு வாழ்த்துகள்

செல்வம் பெறுக, வறுமை நீங்க, சோகம்
மறைந்து வளமை பிறக்க, அறிவும்,
துணிவும் அனைவரும் பெற்றிட நல்லோர்
பெருகி உலகம் செழித்திட நடு இரவில்
உதித்தெழுந்த புத்தாண்டே...




மதங்கள் அற்ற ஒரு மாதம் பிறக்கட்டும்
சாதிகள் அற்ற ஒரு சகாப்தம் பிறக்கட்டும்
பெண்ணையும் ஆணையும் சமமாய்
போற்றும் சரித்திர ஆண்டாய் இந்த
புத்தாண்டு வளட்டும்!

புதிய எண்ணங்கள்,
புதிய முயற்சிகள்,
புதிய உறவுகள்,
புதிய உணர்வுகள்,
புதிய நம்பிக்கை,

என அனைத்தும்
புதிதாய் பழைய சொந்தங்களோடு
செழிக்கட்டும் இந்த புத்தாண்டு..

நல்லவற்றை நினைப்போம்,
உதவிகள்பல செய்வோம்,
மனித நேயத்தைக் காப்போம்,
பொல்லாத காலம் எல்லாம் போனது
என்று எண்ணி இனி வரும் புத்தாண்டை
இனிமையாய் கழிப்போம்.

புதிதாய் பிறந்த புத்தாண்டு
குழந்தையை அன்பாய் வளர்த்து
அர்த்தமுள்ளதாக்குவோம்!!
இனிய ஆங்கில புத்தாண்டு வாழ்த்துக்கள்!!



**முனைவர் ஆ.மவுரியன்**
**ஆசிரியர் & வெளியீட்டாளர்**

# ஒரிஜினல் எம்-சாண்ட்டை கண்டுபிடிப்பது எப்படி?

## விழிப்புணர்வு முகாம் நடத்த பொறியாளர்களுக்கு முதல்வர் உத்தரவு



ஒரிஜினல் எம்-சாண்ட் என்பதை எப்படி கண்டுபிடிப்பது என்பது தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு முகாம் நடத்த முதல்வர் எடப்பாடி பழனிசாமி பொறியாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார். தமிழகத்தில் ஆற்றுமணலுக்கு மாற்றாக எம்சாண்ட் எனப்படும் செயற்கை மணலை ஊக்குவிக்க தமிழக அரசு முடிவு செய்தது. ஆனால், தமிழகத்தில் போலி எம்சாண்ட் குவாரிகள் ஏராளமானவை இயங்கி வருகிறது. இதை தடுக்க ஒரிஜினல் எம்-சாண்ட் தயாரிக்கும் நிறுவனங்களை கண்டறிந்து அந்த குவாரிகளுக்கு மதிப்பீட்டு சான்று வழங்க முதல்வர் எடப்பாடி பழனிசாமி கட்டுமான பிரிவு முதன்மை தலைமை பொறியாளர் ராஜாமோகனுக்கு உத்தரவிட்டார்.

இதை தொடர்ந்து பொதுப்பணித்துறை முதன்மை தலைமை பொறியாளர் அலுவலகம் சார்பில் தமிழகம் முழுவதும் இயங்கி வந்த 1200 குவாரி உரிமையாளர்களுக்கு கடிதம் எழுதி இருந்தது. அதன்பேரில் தற்போது வரை 216 குவாரிகளுக்கு மதிப்பீட்டு சான்று வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேலும், 900க்கும் மேற்பட்ட குவாரிகள் சான்றுகள் பெறப்பட வேண்டியுள்ளது. இந்த குவாரிகள் சான்று பெற அழைப்பு விடுத்தும் விண்ணப்பிக்காத நிலையில், அந்த குவாரிகளில் ஒரிஜினல் எம்சாண்ட் தான் தயாரிக்கப்படுகிறதா என்ற கேள்வி எழுந்தது. இந்த நிலையில் ஒரிஜினல் எம்-சாண்ட் குறித்து பொதுமக்களுக்கு போதிய அளவில் விழிப்புணர்வு இல்லை என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் மதிப்பீட்டு சான்று பெற்ற குவாரிகள் பற்றி பொதுமக்கள் அறியும் வகையில் அறிவிப்பு பலகை வைக்க முதன்மை தலைமை பொறியாளர் சார்பில் அனைத்து மாவட்ட கலெக்டர்களுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. தொடர்ந்து, ஒரிஜினல் எம்-சாண்ட் தானா என்பதை எப்படி கண்டுபிடிப்பது என்பது தொடர்பாக மாநிலம் முழுவதும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு முகாம் நடத்த முதல்வர் எடப்பாடி பழனிசாமி பொறியாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார். அதன்பேரில் தனியார் எம்-சாண்ட் நிறுவனங்களை வரவழைத்து அவர்கள் மூலம் எம்சாண்டை சோதிப்பது எப்படி, மற்றும் ஒரிஜினல் எம்-சாண்ட் பயன்படுத்தி கட்டிடம் கட்டினால் எப்படி இருக்கும் என்பது தொடர்பாக இந்த முகாமில் குறும்படம் ஒளிபரப்பப்படுகிறது. இது தொடர்பாக கட்டுமான நிபுணர்கள் மூலம் பொதுமக்களுக்கு விளக்கம் அளிக்கப்படுகிறது. சென்னையில் சேப்பாக்கம் எழிலகம் வளாகத்தில் உள்ள பொதுப்பணித்துறை தலைமை அலுவலகத்தில் இந்த முகாம் நடைபெறுகிறது.

எம்-சாண்ட் கற்கண்டு சைசில் இருந்தால் ஒரிஜினல்: எம்-சாண்ட் மணலை கையில் எடுத்து புகைப்படம் எடுக்க வேண்டும். அவ்வாறு எடுத்த படத்தை பெரிதுப்படுத்தி பார்க்க வேண்டும். அப்போது கற்கண்டு மாதிரி சதுர வடிவில் இருந்தால் ஒரிஜினல் எம்-சாண்ட். ஆனால், அவல் மாதிரி இருந்தால் அது போலி எம்சாண்ட். அதே போன்று எம்-சாண்ட் மணல் ஒரு பிடியை கையில் எடுத்து தேய்த்து பார்க்க வேண்டும். அப்போது, மிண்ணுகிற துகள்கள் இருந்தால் போலி எம்-சாண்ட. இதன் மூலம் பொறியாளர்கள் மட்டுமின்றி பொதுமக்களும் எளிதாக கண்டுபிடிக்க முடியும். எம்-சாண்ட்டில் 15 சதவீதத்துக்கு மேல் டஸ்ட் இருக்க கூடாது. அதாவது 7ல் ஒரு பங்கு டஸ்ட் இருந்தால் மட்டுமே ஒரிஜினல் எம்சாண்ட் ஆகும். அது மட்டுமே கட்டுமானத்துக்கு உகந்தது.

– சரவணன்




# சென்னையின் பல்வேறு பகுதிகளில் அவசர கால அழைப்பு, கேமரா, சென்சார் கருவி ஒலிபெருக்கி வசதிகளுடன் ஸ்மார்ட் கம்பங்கள்

சென்னையின் பல்வேறு பகுதிகளில் அவசர கால அழைப்பு, கேமரா, சென்சார் கருவி ஒலிபெருக்கி வசதிகளுடன் ஸ்மார்ட் கம்பங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாக மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சென்னை மாநகராட்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின்கீழ் 1000 கோடி மதிப்பில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. குறிப்பாக, பல்வேறு திட்ட பணிகள் மற்றும் வசதிகளை கண்காணிக்க ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் 150 கோடி செலவில் ரிப்பன் மாளிகையில் அமைக்கப்பட்டு வருகிறது. கேரள அரசு நிறுவனமான கேரளா ஸ்டேட் எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷன் இந்த திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதில், அவரச கால பட்டன், பேரிடர் கண்காணிப்பு, சுழல் கண்காணிப்பு கேமரா உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் ஸ்மார்ட் கம்பங்கள் அமைக்கப் பட்டு வருகிறது. இந்த கம்பத்தின் கீழ் பகுதியில் அவசரகால பட்டன் அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் பேரிடர் உள்ளிட்ட பல்வேறு அவசர காலங்களில் இந்த பட்டனை அழுத்தலாம். இந்த தகவல் உடனடியாக கட்டுப்பாட்டு மையத்தை சென்றடையும். அங்கிருந்து சிசிடிவி கேமரா மூலம் கண்காணித்து, அந்த இடத்திற்கு உடனடியாக உதவி குழு அனுப்பி வைக்கப்படும்.

இதற்கு மேலே வாகன நிறுத்த கண்காணிப்பு கேமரா மற்றும் 360 டிகிரி சுழலும் கண்காணிப்பு கேமரா, பொது அறிவிப்பு ஒலி பெருக்கி ஆகியவை இடம்பெற்றுள்ளன. அவசர காலங்களில் பொதுமக்களுக்கு தெரிவிக்க வேண்டிய அறிவிப்புகள் இந்த ஒலி பெருக்கு மூலம் தெரிவிக்கப்படும். மேலும், வை-பை வசதி மற்றும் ஸ்மார்ட் எல்இடி தெரு விளக்கு வசதியும் இந்த கம்பத்தில் அமைக்கப் பட்டுள்ளது. இதை தவிர்த்து மழையின் அளவை கண்காணிப்பதற்கான சென்சார் மற்றும் இயற்கை நிகழ்வுகளை கண்காணிப்பதற்கான சென்சார்களும் இந்த கம்பத்தில் அமைக்கப்பட உள்ளன. மழையின் அளவை கண்காணிக்கும் சென்சார் மற்றும் இயற்கை நிகழ்வுகளை கண்காணிக்கும் சென்சார்களும் இந்த கம்பங்களில் அமைக்கப்படவுள்ளன. எந்த பகுதியில் எவ்வளவு மழை பெய்துள்ளது என்பதை அறிந்து, மழை பாதிப்பு குறித்த அறிவிப்பு பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படும்.

இயற்கை நிகழ்வுகளை கண்காணிக்கும் சென்சார்கள் மூலம் காற்றின் தரத்தை காண்காணிக்க முடியும். இதன்மூலம் காற்று மாசு அதிகமாக இருந்தால், இது தொடர்பான

தகவலை பொதுமக்களுக்கு தெரிவிக்க முடியும். ஜீவா பூங்கா, சிவன் பூங்கா, பெசன்ட் நகர் கடற்கரை, மெரினா கடற்கரை, உஸ்மான் சாலை, நியூ ஆவடி சாலை, வாலாஜா சாலை, கொங்கு ரெட்டி சுரங்கபாதை, அரங்கநாதன் சுரங்கப்பாதை உள்ளிட்ட நகரின் முக்கிய இடங்களில் இது கம்பங்கள் அமைக்கப்பட உள்ளன. இது தொடர்பாக சிறப்பு திட்டங்கள் துறையின் தலைமை பொறியாளர் நந்தக்குமார் கூறியதாவது: சென்னை மாநகராட்சியில் வாகன நிறுத்த மேலாண்மை திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை கண்காணிக்கும் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்படவுள்ளது. காவல், தீயணைப்பு, போக்குவரத்து, வானிலை, பேரிடர் மேலாண்மை, பொதுப் பணித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருந்து தகவல் பெறப்படும். இதைக் கொண்டு அனைத்து துறைகளுடன் இணைந்து பல்வேறு கண்காணிப்பு பணிகளை செய்ய முடியும். இதற்கான சோதனை ஒட்டம் விரைவில் நடைபெறும். இவ்வாறு அவர் கூறினார்.

செயலிகள்: இந்த திட்டத்தின்கீழ், பொது மக்கள் மற்றும் அதிகாரிகள் பயன்பாட்டுக்காக 2 செயலிகள் உருவாக்கப்பட்டுள்ளது. வெர்க் ஸ்பேஸ் எனப்படும் அதிகாரிகளுக்கான செயலியில் அனைத்து அதிகாரிகளின் தொடர்பு எண்ணிகள் இருக்கும். இந்த செயலி மூலம் பொதுமக்கள் தங்கள் பகுதியின் குறைகளை அதிகாரிகளுக்கு தெரிவிக்கலாம்.

குப்பை அகற்ற சென்சார் கருவி: இந்த திட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை கம்பங்களும் அமைக்கப்படவுள்ளது. இந்த கம்பங்களில் கேமராக்களும், குப்பை தொட்டிகள் சென்சார்களும் இடம் பெற்றிருக்கும். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல், தொட்டிகளில் குப்பை சேர்ந்து விட்டால் சென்சார் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்துவிடும். இதனைத் தொடர்ந்து தொழிலாளர் அந்த குப்பையை தொட்டியை சுத்தம் செய்வார்கள். மேலும் தொட்டியை சுற்றி உள்ள பகுதிகளை கேமரா மூலம் கண்காணிக்க முடியும்.

**– கனகதுர்கா**


# நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்**
**துடிப்பான, உண்மையை வெளிக்கொணர**
**சேவை மனப்பான்மையுடன்**
**பணியாற்ற மாவட்ட வாரியாக**

**ஆண்/பெண் நிருபர்கள் தேவை**

தொடர்புக்கு

**மக்கள் விசாரணை ✷ அருணை முரசு**

**Cell : 93821 33334 / 044 - 48615321**

**Email : writermouriyan@gmail.com**

# பெண்களுக்கு ஏன் இந்த நிலமை?

தொழிலாளர்கள் அதிகம் நிறைந்த சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பூர், கோவை, நெல்லை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் கந்து வட்டிக் கொடுமையில் சிக்கி தவிப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக உள்ளது. இவர்கள் வாங்கும் பணத்தை உரிய தேதியில் செலுத்தாவிட்டால் அதற்கு மைக்ரோ வட்டி, மீட்டர்வட்டி, ஸ்பீடு வட்டி என்று உருட்டி, மிரட்டி வாங்கி விடுகின்றனர். இதனால் சொற்ப உடமைகளையும் இழந்து பலர் வீதிக்கு வருகின்றனர். அப்போதும் சமாளிக்க முடியாது என்ற எண்ணம், மனதில் ஆழமாக பதியும் போது, அரிய உயிரையும் மாய்க்க தயாராகின்றனர் என்பதும் ஆய்வுகள் தெரிவித்துள்ள அதிர்ச்சி தகவல்.



இந்த கொடுமைகள் தொடர்வதற்கு நிர்வாக கோளாறுகள் தான் முக்கிய காரணம் என்கின்றனர் சமூக ஆர்வலர்கள். நாடு என்னதான் வேகமாக வளர்ந்தாலும், கிராமங்களில் வாழும் பலருக்கு, வங்கிகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாமல் இருப்பதும் கந்து வட்டி கொடுப்போருக்கு வரமாக உள்ளது. இதனால் தவிர்க்க முடியாத சூழ்நிலையில், வேறு வழியில்லாமல் ஏழை மக்கள் வட்டிக்கு பணம் வாங்குகின்றனர். இப்படி வாங்கி, சிக்கலில் மாட்டிக் கொள்ளும் பலரிடம், அதனை வசூலிக்க போலீசாரே துணையாக இருப்பதும் கொடுமை. இதனால் தான்,சில நேரங்களில் பாதிக்கப்பட்டவர்கள் வீதிக்கு வந்து போராட வேண்டிய நிலை ஏற்படுகிறது என்பது சமூக ஆர்வலர்களின் குமுறல்.

லேட்டஸ்ட்டாக மைக்ரோ பைனான்ஸ் என்பது நடுத்தர குடும்பத்து பெண்களுக்கு எமனாகி வருகிறது. எந்த தொழிலும் செய்யாத பத்து பெண்களை ஒரு குழுவாக இணைத்து அவர்களுக்கு 20 ஆயிரம் கடன் கொடுத்து வாராவாரம் திருப்பி செலுத்தும் நெருக்கடியை மைக்ரோபைனான்ஸ் நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. இந்த நிறுவனங்கள் சுயதொழில் செய்யாத, வேலைக்கு செல்லாத பெண்களுக்கு கடன் கொடுக்கிறது. இதன் அபத்தம் தெரியாமல் கடன் வாங்கிவிட்டு அதை கட்டமுடியாமல் பெண்கள் தவிக்கின்றனர்.

ஒரு குழுவில் பணம் வாங்கிவிட்டு செலுத்தமுடியாமல் தவிக்கும் பெண்கள், அதனை திருப்பி செலுத்த வேறு குழுவில் இணைந்து கடன் பெறுகின்றனர். இரண்டு குழுவுக்கும் வாரம் தோறும் தவணையை செலுத்த முடியாத நிலையில், கடன் கொடுத்த அலுவலர் காவல் துறைக்கு போவதாக மிரட்டுவார். கடன் பெற்ற ஒன்பது பெண்களும், கட்டாத பெண்ணின் வீட்டிற்கு சென்று கௌரவத்தை சந்தி சிரிக்க வைத்துவிடுவார்கள். இதனால் மனஉளைச்சலில், பெண்கள் உயிரை மாய்க்கும் சம்பவங்களும் நடந்து வருகிறது. இந்த வகையில் மைக்ரோ பைனான்ஸ் என்பதும், எளிய குடும்பத்து பெண்களுக்கு எமனமாக மாறி வருகிறது என்கின்றனர் பெண்ணியல் ஆர்வலர்கள்.

நெசவாளர்கள், சிறு தொழில் செய்வோர் களுக்கு, தங்கள் தொழிலை தொடர்ந்து நடத்திட நடைமுறை முதலீடு தேவைப்படுகிறது. வங்கிகள் பெரும் நிறுவனங்களுக்கு உரிய ஆவணங்களை பிணையமாக வைத்து பணம் கொடுக்கின்றன. ஆனால் சிறு தொழில் செய்வோருக்கு வாசல்வரை வந்து நிதி உதவிகளை செய்ய வங்கிகளால் இயலுவதில்லை. மேலும் வங்கியில் கடன் பெறுவதற்கான நடைமுறை விதிகள் சிறு முதலீட்டாளர்களுக்கு ஏற்றதாக இருப்பதில்லை. இதனால் கந்து வட்டி, அடகுகடை போன்றவற்றில் அதிக வட்டிக்கு கடன் வாங்கி விட்டு, ஆயுள் முழுவதும் அதனை கட்டமுடியாமல் தவிக்கின்றனர் என்பது சிறுதொழில் முனைவோர் கூட்டமைப்பு நிர்வாகிகளின் குமுறல்.

**பாதிக்கப்பட்டோருக்கு கவுன்சலிங் வழங்கப்படும், அமைச்சர் தகவல்:** தமிழக மின்சாரத்துறை அமைச்சர் தங்கமணி கூறுகையில், ‘‘குமாரபாளையத்தில் மைக்ரோ பைனான்ஸ்

# "பெண்கள் மட்டும் தான் டார்கெட்"

# "மைக்ரோ ஃபைனான்ஸ்" நிறுவனத்தால் தொடரும் மரணங்கள்..!



நிறுவனங்களில் கடன் வாங்கியவர்கள் அதனை திருப்பி செலுத்தமுடியாமல் தற்கொலை செய்வதாக தகவல்கள் வந்தது. இதையடுத்து மாவட்ட கலெக்டருடன் கலந்து பேசி, கடன் பெற்றவர் களுக்கு கவுன்சிலிங் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்கொலை சம்பவங்களை தடுக்க மாவட்ட நிர்வாகம் சார்பில் மருத்துவர் களை கொண்டு ஆலோசனை வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,'' என்றார்.

அரசு தள்ளுபடி செய்ய வேண்டும்: தமிழகத்தில் நாமக்கல், சேலம் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட மாவட்டங்களில் விசைத்தறிகள் அதிகம் உள்ளது. தற்போது ஜவுளித் தொழில் கடும் நசிவை சந்தித்துள்ளது. இதில் நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் இந்த தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிர் அதிகளவில் மைக்ரோ பைனான்ஸ் கடன்வாங்கி விட்டு, அதிலிருந்து மீள முடியாமல் தவிக்கின்றனர். தற்போதைய தொழில் நெருக்கடி தீரும்வரையிலோ, அல்லது ஒரு ஆண்டுக்கோ, மைக்ரோ பைனான்ஸ் நிறுவனங்களின் தவணை வசூலுக்கு அரசு தடை போட வேண்டும் என்பது உழைக்கும் மகளிரின் கோரிக்கையாக உள்ளது.

பெண்களை குறிவைத்து கடன்: கந்துவட்டியாக இருந்தாலும், மைக்ரோ பைனான்சாக இருந்தாலும் ஆண்களுக்கு கடன் தருவதில் தயக்கம் காட்டுகின்றனர். பெண்களை போல ஆண்கள், அவர்களது நிபந்தனைகளுக்கு ஒத்துப்போவதில்லை. இதனால் கந்து வட்டி நிறுவனங்கள் ஏராளமான மகளிர் குழுவை உருவாக்கி வருகின்றன. இதில் குமாரபாளையம் தாலுகாவில் மட்டும் சுமார் 400 மைக்ரோ பைனான்ஸ் மகளிர் குழுவினர் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கிறது.

நிதி நிறுவனங்கள் என்ற பெயரில் நூதன கந்து வட்டி: கந்துவட்டியை ஒழிக்க பல சட்டங்கள் கொண்டு வரப்பட்டாலும், நாமக்கல்லில் தொடர்ந்து கந்துவட்டி நடைபெறுகிறது. தனியார் நிதிநிறுவனங்கள் என்ற பெயரில், விசிட்டிங் கார்டுடன் வலம் வரும் நபர்கள், நகரையொட்டியுள்ள சலூன்கடைகள், காய்கறி கடைகள், பெட்டிக்கடை, மளிகைகடை உரிமையாளர்களுக்கு கடனுக்கு பணம் கொடுத்து கந்துவட்டி வாங்கி வருகிறார்கள். இதே போல் மாவட்டத்தில் பல கிராமங்களில் இந்த கந்துவட்டி கும்பல் கடன் கொடுத்து பணம் வசூல் செய்வது குறிப்பிடத்தக்கது.

நடை முறைகளை எளிதாக்கி தூண்டில்: வங்கிகள் பெரிய முதலீடு தேவைப்படும் நிறுவனங்களுக்கு கடன் கொடுப்பதையே விரும்புகின்றன. இந்த சிரமத்தை மைக்ரோ பைனான்ஸ் நிறுவனங்களும் கந்து வட்டியாளர்களும் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்துகின்றனர். பணத்தேவை அதிகம் இருப்பதால் வட்டி அதிகம் என்ற போதிலும் கந்து வட்டி வலையில் மக்கள் எளிதாக மாட்டுகின்றனர் என்கின்றனர் மூத்த அதிகாரிகள்.

**- வீ. சிவசங்கர்**

நிர்வாகத்திறனில் தமிழக அரசுக்கு முதலிடம் கிடைத்ததில் எந்தவித சிபாரிசும் இல்லை என்று முதல்வர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார். தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி, சேலத்தை அடுத்த ஓமலூர் காமலாபுரம் விமான நிலையத்தில் நேற்று அளித்த பேட்டி: நிர்வாகத்திறனில் தமிழக அரசு முதலிடத்தில் உள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது. இது ஒட்டுமொத்த தமிழக மக்களுக்கும் கிடைத்த வெற்றி. இதற்காக பாடுபட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, அதிகாரிகள் அனைத்துதுறைகளிலும்சிறப்புகவனம்செலுத்தி பணியாற்றினர். இதற்காகவே ஆளுமைத்திறன் மிக்க மாநிலம் என்ற அந்தஸ்து தமிழகத்திற்கு கிடைத்துள்ளது. இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்களில், 50 காரணங்களை ஆராய்ந்து, சிறப்பாக செயல்படுவதை கணக்கிட்டு, அதன் அடிப்படையில் தமிழகத்திற்கு 5.6 மதிப்பெண்ணுடன் முதலிடம் கிடைத்துள்ளது. யூனியன் பிரதேசங்களில் காங்கிரஸ் ஆளும் பாண்டிச்சேரி முதலிடம் பிடித்துள்ளது. இதிலிருந்தே எந்த சிபாரிசும் இல்லாமல் தமிழக அரசு, முதலிடம் பெற்று பெருமை சேர்த்துள்ளது என்பதை அனைவரும் உணரவேண்டும்.

எந்த பிரச்னையும் இல்லாமல், யாருடைய தலையீடும் இல்லாமல் சுதந்திரமாக முதற்கட்ட ஊராட்சி தேர்தல் நடந்துள்ளது. இது மறைமுகத் தேர்தல். யார் வெற்றி பெறுவார்கள் என்பதை மக்களே முடிவு செய்கின்றனர். அப்படி இருக்கும் போது யாரும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், தேர்தலுக்கு எதிராக

# நிர்வாகத்திறனில் தமிழக அரசுக்கு முதலிடம் கிடைத்ததில் சிபாரிசு எதுவுமில்லை

## முதல்வர் எடப்பாடி பழனிசாமி பேட்டி



நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இதற்கு மேல்முறையீடு செய்ய வேண்டுமா? என்பதை தேர்தல் ஆணையமே முடிவு செய்ய வேண்டும். அதிலும் ஒன்றிய, மாவட்ட கவுன்சிலர்களுக்கு மட்டுமே மக்கள் கட்சி சின்னத்தில் வாக்களித்துள்ளனர். 1882ம் ஆண்டு தொடங்கி, ஒவ்வொரு பத்தாண்டுக்கு ஒரு முறை, மக்கள் தொகை கணக்கெடுப்பு நடந்து வருகிறது. அந்த வகையில் தான், தற்போதும் தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு நடக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் தெளிவாக கூறியுள்ளது. 6மாதத்திற்கு மேல் ஒருவர் இங்கு வசித்தால் கூட, கணக்கெடுப்பில் இடம் பெறுவார் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த கணக்கெடுப்பால் இந்தியாவில் வாழும் எந்த இந்தியரும் பாதிக்க மாட்டார்கள் என்பதும் அனைவருக்கும் தெரியும். ஆனால் அரசியலுக்காக, மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து தவறான தகவல்களை பரப்புகிறார்கள்.

மருத்துவத்துறையில் தமிழகத்தில் அதிக ஒதுக்கீடு இல்லை என்பதை ஏற்க முடியாது. இந்தியாவிலேயே தமிழகத்தில் தான், நடப்பாண்டு புதிதாக 316 மருத்துவ மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒரே ஆண்டில் 9 மருத்துவ கல்லூரிகளுக்கு அனுமதி பெற்ற சாதனையையும் அரசு நிகழ்த்தி உள்ளது. இதில் 6 மருத்துவ கல்லூரிகளுக்கான பணிகள் டெண்டர் விடப்பட்டுள்ளது. 3 கல்லூரிகளுக்கு விரைவில் டெண்டர் விடப்பட்டு, அனைத்து பணிகளும் ஒரு வருடத்தில் முடிக்கப்படும். தர்மஆஸ்பத்திரிகள் என்ற பெயரை மாற்றி, தனியார் ஆஸ்பத்திரிகளுக்கு இணையாக இவை அமைக்கப்படுகிறது. இதன் மூலம் 900 மருத்துவர்கள் புதிதாக உருவாகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தமிழக அரசு கடும் நிதி நெருக்கடியில் இருந்த சூழலில் கூட, மின்ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி உள்ளது. எனவே, அவர்கள் வேலை நிறுத்த அறிவிப்பை கைவிட வேண்டும். மிக முக்கியமான மின்துறை பணிகளால் மக்களும், விவசாயிகளும் பெரிதும் பயன்படுகின்றனர். இதை உணர்ந்து அவர்கள் முடிவெடுக்க வேண்டும். நெல்லுக்கான கொள்முதல் விலை, ஒவ்வொரு ஆண்டும் உயர்த்தப்பட்டு வருகிறது. நடப்பாண்டு உயர்த்துவது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் ஆலோசித்து அறிவிக்கப்படும். இவ்வாறு முதல்வர் கூறினார்.

**- ஆசிரியர்**


## விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

# மக்கள் விசாரணை

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. Email : news@makkalvisaranai.com
Cell : 93821 33334, 93821 44446

# இதுதான் வாழ்க்கை!

ஒருபக்க சிறுகதை

ஆற்றங்கரைக்குத் தன் மனைவியை அழைத்துப் போயிருந்தார் ஒருவர். அவளிடம் ஒரு பையைக் கொடுத்தார். பெரிய பெரிய கற்களைக் காண்பித்தார்.

"இந்தப் பையை அந்தக் கற்களால் நிரப்பு" என்றார்.

மனைவி நிரப்பி எடுத்து வந்தாள். "இதற்கு மேல் நிரப்ப முடியாது" என்றாள்.

கணவர் கீழே கிடந்த கூழாங்கற்களில் சிலவற்றை எடுத்தார். அதே பையில் போட்டுக் குலுக்கினார். அவை பெரிய கற்களுக்கு நடுவில் இருந்த இடைவெளிகளில் உள்ளே இறங்கின. ஒரு கட்டத்தில் மேற்கொண்டு கூழாங்கற்களைப் போட இடம் இல்லை.

"இப்போதாவது நிரம்பிவிட்டதாக ஒப்புக் கொள்வீர்களா?" கேட்டாள் மனைவி.

கணவர் அங்கேயிருந்த மணலை அள்ளிப் பையில் போட்டார். பையை மேலும் குலுக்கினார். கற்கள், கூழாங்கற்கள் இவற்றுக்கு இடையில் இருந்த இடைவெளிகளில் மணல் இறங்கியது.

"இதே பையை முதலில் மணலால் நிரப்பியிருந்தால், பெரிய கற்களுக்கு இடம் இருந்திருக்குமா? என்று கணவர் கேட்டபோது...

"இருந்திருக்காது" என்று ஒப்புக் கொண்டாள் மனைவி.


"வாழ்க்கையை மேம்படுத்தக்கூடிய அன்பு, கருணை, உடல்நலம், மனநலம் போன்ற உன்னதமான விஷயங்கள் பெரிய கற்கள் போன்றவை. வேலை, வீடு, கார் போன்ற செல்வங்கள் கூழாங்கற்களுக்குச் சமமானவை. கேளிக்கை, வீண் அரட்டை போன்ற அற்ப விஷயங்கள் இந்த மணல் போன்றவை. முதலில் பெரிய விஷயங்களுக்கு வாழ்க்கையில் இடம் கொடுங்கள். அதன் பின்னும் சின்ன சின்ன விஷயங்களுக்கு இடம் இருக்கும். ஆனால், உங்கள் வாழ்க்கையை அற்பமான விஷயங்களுக்காகச் செலவழித்துவிட்டால், முக்கியமான விஷயங்களுக்கு இடம் இருக்காது".



- முனைவர் ஆ. மவுரியன்

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from No.3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078.
Printed by : S.ALI MOHAMMAD SYEED, at J.M.PROCESS, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: A.MOURIYAN.




# BIMAR NAHI RAHA LACHAAR, HO RAHA MUFT UPCHAAR

## World's largest healthcare scheme PM-JAY will make India, 'Ayushman'.

For the first time in the history of India, crores of poor and vulnerable Indians will benefit through the Pradhan Mantri Jan Arogya Yojana, PM-JAY. Now every entitled family will have access to cashless and paperless healthcare coverage for all critical diseases.

- Benefits to over **10 crore** poor and vulnerable families and more than **50 crore** beneficiaries across the country
- Annual healthcare benefits of up to **Rs. 5 Lakh** for every entitled family
- Access to healthcare services in all government and empanelled private hospitals

Toll-Free helpline number
**14555/1800111565**

www.pmjay.gov.in /AyushmanBharatGOI /AyushmanNHA

**MAKKAL VISARANAI**, Tamil Monthly. Regd. No.: **TN/CC(S)DN/461/19-21**
Registered with Registrar of Newspaper for India Under **No.: TNTAM44870/2012**
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month




Also visit our MAKKAL VISARANAI website http://makkalvisaranai.com/ and enjoy reading more

Scan now to download the eBook (PDF)

Scan now to download the App